இதழ் 358
27 செப்டம்பர் 2025
21 பக்கங்கள்

# இலக்கு

வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

SUBSCRIBE US! youtube.com/@IlakkuWeb2.0
LIKE US! facebook.com/ilakku.ilakku.10
FOLLOW US! twitter.com/Ilakku1



## ஐ.நா.வின் புதிய பிரேரணை
## எதிர்பார்ப்புக்களை சிதைத்த
## வெற்றுக் கடதாசி ஆவணம்

விதுரன்



## விஜயின் வழிகாட்டுதல்:
## உலகத் தமிழர்களை இணைக்கும் உறவுப் பாலம்

ராஜ்மோகன் தமிழக வெற்றிக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர்



## அமெரிக்காவின் வெற்றி – தோல்வியை தீர்மானிக்கப்போகும் ஒன்றுகூடல்

வேல்ஸில் இருந்து அருஸ்



© 2025 இலக்கு இணையம்

# ‘பார்த்தீபன் இப்போதும் பசியோடு தான் இருக்கின்றான்’

## நாடாளுமன்றத்தில் ரவிகரன் நா. உ கருத்து



தியாகதீபம் திலீபன் எந்த நோக்கத்திற்காக பசித்திருந்து தனது இன்னுயிரைத் தியாகித்தாரோ அந்த நோக்கமும், அவரின் எண்ணமும் இதுவரை நிறைவேறவில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்

பாராளுமன்றில் இன்று உரையாற்றிய அவர் ‘பார்த்தீபன் இப்போதும் பசியோடுதான் இருக்கின்றான்’ என்று தெரிவித்தார்.

தமது உரையின் ஆரம்பத்தில் அவர், ‘ஈழத்தமிழர்களின் உரிமைக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அகிம்சைவழியில் உண்ணா நோன்பிருந்து உயிர்துறந்த தியாகதீபம் திலீபன் அவர்களுக்கு இந்த உயரிய சபையிலே முதற்கண் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்’ என்று குறிப்பிட்டார்.

இராசையா பார்த்தீபன் எனும் இயற்பெயரைக்கொண்ட தியாகச் செம்மல் திலீபன் தமிழர்களின் உரிமைக்காக தனது இன்னு

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# இந்தியாவின் சீன எல்லையில் வெடித்துள்ள மாநில அதிகார போராட்டம்

இந்திய இமயமலைப் பகுதியான லடாக்கில் கூட்டாட்சிப் பிரதேசத்திற்கு மாநில அந்தஸ்து கோரி நடத்தப்பட்டபோராட்டம் வன் முறையாக மாறியது. போராட்டக்காரர்கள் காவல்துறையினருடன் மோதியதாலும், துணை ராணுவ வாகனம் மற்றும் நாட்டின் ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் (BJP) அலுவலகத்திற்கு தீ வைத்ததாலும் இந்த போராட்டம் வன் முறையாக மாறியது.

கடந்த புதன்கிழமை(24) காவல்த்துறையினர் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசி ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தடியடி நடத்தியதில்



பலர் காயமடைந்ததாகவும் அவர்களில் சிலர் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

லடாக் பிராந்தியத்தின் தலைநகரான லே மாவட்டத்தில் ஐந்துக்கும் மேற்பட்டோர் ஒன்றுகூடுவதை

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# புலிகள் அமைப்புக்காக நிதிப்பரிமாற்றத்தில் ஈடுபட்டதாக இலங்கைப் பெண் மீது இந்தியாவில் குற்றச்சாட்டு

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த நபர் ஒருவரின் கட்டளைப்படி, மும்பையில் உள்ள வங்கிக் கணக்கு ஒன்றில் இருந்து, அந்த அமைப்பினருக்கு, 42 கோடி இந்திய ரூபாயை மாற்ற முயன்றதாக சட்டவிரோத பணப் பரிமாற்ற வழக்கில் கைதான இலங்கை பெண் ஒருவர் அந் நாட்டு அதிகாரிகளிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இலங்கையில் இருந்து சுற்றுலா விசாவில், 2019ஆம் ஆண்டில் சென்னைக்கு சென்ற பெண்ணொருவரே இந்த சம்பவம் தொடர்பில் முன்னதாக கைது செய்யப்பட்டிருந்தார்.

புலிகள் அமைப்புடன் தொடர்புடைய பணச்சலவை வழக்




கில், அந்த பெண்ணை விசாரிக்க இந்திய அமுலாக்கத்துறைக்கு நீதி மன்றம் அனுமதி வழங்கியதை அடுத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

சென்னையில் உள்ள விசேட தேசிய புலனாய்வு முகவரக நீதி மன்றம் அமுலாக்க துறைக்கு இந்த அனுமதியை அளித்தது.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# கடும் வீழ்ச்சியை நோக்கி செல்லும் சீனாவின் மக்கள் தொகை




இந்தியாவும் சீனாவும் இன்று உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடுகள், மேலும் இந்த நூற்றாண்டின் இறுதி வரை இரண்டும் முதலிடத்தில் இருக்கும் என்று ஐ.நா. கணித்துள்ளது. ஆனால் இந்த கணிப்புகளில் அவற்றின் பாதைகளின் தன்மை வேறுபடுகின்றன.

சீனாவின் மக்கள்தொகை ஏற்கனவே குறையத் தொடங்கியுள்ளது, மேலும் 2100 ஆம் ஆண்டுக்குள் பாதியாகக் குறைந்து சுமார் 630 மில்லியனாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இதற்கு

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

# புற்றுநோயை முற்றாக ஒழிக்கும் திட்டம் ஆரம்பம்

ரஷ்ய புற்றுநோய் நோயாளிகளுக்கு வரும் மாதங்களில் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட தடுப்பூசி மூலம் சிகிச்சை அளிக்கப்பட உள்ளது என கமலேயா ஆராய்ச்சி தொற்றுநோயியல் மற்றும் நுண்ணுயிரியல் நிறுவனத்தின் தலைவர் அலெக்சாண்டர் ஜின்ட்ஸ்பர்க் தெரிவித்துள்ளார்.

புதிய தடுப்பூசி என்பது நோயாளியின் சொந்த மரபணு தகவல்களைப் பயன்படுத்தி வீரியம் மிக்க புற்றுநோய் கலங்களை




குறிவைத்து வடிவமைக்கப்பட்ட ஒரு தனிப்பயனாக்கப்பட்ட சிகிச்சையாகும். செயற்கை நுண்ணறிவின் உதவியுடன் உருவாக்கப்பட்ட

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: முன்னாள் இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்படுவர் – ஜனாதிபதி–




உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகள் தொடர்ந் தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், சம்பவம் தொடர்பில் சில முன்னாள் இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள இலங்கை சமூகத்தினருடனான சந்திப்பின் போது பேசிய ஜனாதிபதி, உண்மையை வெளிக்கொணர புதிய விசாரணைகள் தேவைப்படலாம் என்றும் கூறினார்.

“தாக்குதல்களுக்கு உண்மையிலேயே பொறுப்பானவர்களை அடையாளம் காண்பதில் விசாரணைகள்கவனம் செலுத்துகின்றன,” என்று அவர் கூறினார்.

“நீதி தாமதமாவதற்கு அரசியல் ஒரு முக்கிய காரணம். குண்டு வெடிப்புகளில் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும்நபர்கள் தாக்குதல்களுக்குப் பிறகுவிரைவில் ஆட்சிக்கு வந்தனர். அவர்களில் சிலர் உயர் பதவிகளையும் வகித்தனர். அத்தகைய சூழ்நிலையில், சரியான விசாரணை தொடரும் என்று நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்?” என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

‘விசாரணைகளை தவறாக வழிநடத்தும் வகையில் சாட்சியங்கள் அழிக்கப்பட்டன, மறைக்கப்பட்டுள்ளன அல்லது கையாளப்பட்டன’ என்று ஜனாதிபதி கூறினார்.

இந்த பின்னடைவுகள் இருந்த போதிலும், குற்றப் புலனாய்வுத்

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

# பி.ஜே.பியுடன் கஜன் சிறீ இரகசிய கூட்டு பின்னணியில் அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ்?



இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் தூண்களில் ஒருவரும், இந்திய விளையாட்டுத் துறையை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு சென்று அதன் மூலம் இந்தியாவிற்கும் தனியார் நிறுவனங்களுக்கும் நிதியை சேர்க்கும் திட்டத்தைக் கொண்ட கோ கோ (Kho Kho) என்ற நிறுவனத்தின் தலைவருமான சுதன்ஷு மிட்டல் என்பவரை அண்மையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரனும், தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் நாடாளுமன்ற உறுப்பினர்கஜேந்திர குமார் பொன்னம்பலமும் கூட்டாக சென்று இரகசியமாக சந்தித்த புகைப்படங்கள் கசிந்துள்ளன.

இலக்கு ஊடகத்திற்கு பிரத்யேகமாக கிடைத்த இந்த புகைப்படங்களை வழங்கியவர்கள், இந்த சந்திப்புக்களை அவுஸ்திரேலியாவில் உள்ள தமிழ் காங்கிரஸ் என்ற அமைப்பே இரகசியமாக ஒழுங்கு செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர். அதனை உறுதிப்படுத்தும் முகமாக, இது தொடர்பில் அவுஸ்திரேலிய

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# இந்திய இலங்கை ஒப்பந்தமும் ஒரு தாயும், ஒரு மகனும் செய்த தியாகமும்..!

**பா. அரியநேத்திரன்**

*அன்று 1987,செம்டம்பர்,15, தொடக்கம் 26, வரை. தன்னை வருத்தி தமிழ் மண்ணுக்காக உணவை தவிர்த்து, உணர்வை வெளிக்காட்டி உடலை வருத்தி, உலகில் வெளிப்படுத்தி ஆகுதியான 23 வயது இளைஞனின் 38 வது ஆண்டு நினைவு இன்றாகும்..!*

*இலங்கை இந்திய ஒப்பந்தம் 1987, யூலை, 29ல் மேற்கொள்ளப்பட்டதால் இந்திய அரசு காந்தீய வழியில் போராடிய இரண்டு உயிர்களை பலி எடுத்த வரலாறு ஈழத்தமிழினத்துக்கு மட்டுமே உண்டு.*

*யாழ்ப்பாணத்தில் ஒரு மகன்-தியாகி திலீபன்..*

*மட்டக்களப்பில் ஒரு தாய்-அன்னைபூபதி, தியாகி திலீபன் [பிறந்த திகதி 1963, நவம்பர் 27] 23, வயதில் 1987, செம்டம்பர் 15-26, வரை 12, தினங்கள் நீர் கூட அருந்தாமல் அவரால் அவர் முன்வைத்த 05, கோரிக் கைகள்.*

***1. மீளக்குடியமர்த்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.***

***2. சிறைக் கூடங்களிலும் இராணுவக் காவல் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.***

***3. அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.***

***4. ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முழுமையாகக் களையப்பட வேண்டும்.***

***5. தமிழர் பிரதேசங்களில் புதிதாகக் காவல் நிலை யங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக் கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.***

*அன்னை பூபதி [பிறந்தது 1932, நவம்பர் 03] 56, வயதில் 1988, மார்ச்19, தொடக்கம் ஏப்ரல்,19, வரை நீர் மட்டும் அருந்தி 31, நாட்கள் அவர் முன்வைத்த 02, கோரிக் கைகள்..*

***1. உடனடியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப்டுத்த வேண்டும்.***

***2. புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காணவேண்டும்.***

*இந்த தாயும், மகனும் இந்திய அரசிடம் தமிழீழம் கேட்டு உண்ணாவிரதப்போராட்டம் செய்யவிலை, சமஷ்டி தீர்வு கேட்டு போராட்டம் செய்யவில்லை.*

*இலங்கை இந்திய ஒப்பந்தம் என்ற போர் வையில் அமைதிப்படையாக ஈழமண்ணில் நுழைந்து ஆக்கிரமிப்பு படைகளாக மாறி இலங்கை அரசின் நிகழ்ச்சி திட்டத்தில் தமிழர்களுக்கு எதிராக நடவடிக் கைகளை மேற்கொண்டமையால்தான் இந்தியாவிற்கு எதிராக அந்த நாட்டின் அறவழிப்போர் மரபுகளுடன் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு பாரதத்தின் பகட்டு முகத்திரையை கிழித்தெறிந்தனர்.*

*அவர்களின் தியாகங்கள் நிறைவேற அதற்கான பணிகளை செய்வதே நாம் அவர்களுக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.*

*அந்தவகையில் இன்று 26/09/2025, தியாகி திலீபனின் 38ம் ஆண்டு நினைவாகும். அவர் இன்று உயிருடன் இருந்திருப்பின் 62, அகவையுடன் வாழ்ந் திருப்பார்.*

*அன்னை பூபதியின் 37,ம் ஆண்டு நினைவு கடந்த 2025, ஏப்ரல்,19, அவர் உயிருடன் இருந்திருந்தால் இன்று 93, அகவையுடன் வாழ்ந்திருப்பார்.*

*இன்று 2025, இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்யப் பட்டு 13, வது சட்டத்திருத்தம் மூலம் அறிமுகமான மாகாணசபைமுறைமை இணைந்த வடகிழக்கில் ஒரே*

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

# ஐ.நா.வும் ஈழத்தமிழ் அரசியல்வாதிகளும் அரசஇறைமைக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயலிழப்பு

ஐக்கியநாடுகள் சபையின் 80வது ஆண்டுத் தொடக்க அமர்வு அது மக்கள் இறைமைக்கு முக்கியத்துவம் கொடுக்காது அரச இறைமைக்கு முக்கியத்துவம் கொடுத்த வரலாற்றால் அதனது செயலை இழந்த கட்டமைப்பாக மாறிவிட்டதை உலகுக்குத் தெளிவுபடுத்தக் கூடிய வகையில் அமெரிக்க அரசத்தலைவர் டொனால்ட் ட்ரம்ப் இஸ்ரேலியப் பிரதமர் நெதன்யாகு ஆகியோரின் உரைகள் அங்கு அமைந்தன. டொனால்ட் ட்ரம்பின் சுதந்திரமான திறந்த எல்லைகளுக்கான அச்சுறுத்தல், இஸ்லாமிய சரியாச் சட்டம் மேற்குலகின் சட்டமாக மாறுகிறது என்ற பயமுறுத்தல், ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிட்டது, உலகின் காலநிலை சீர்கேடு குறித்த எச்சரிப்பு வெறும் புரளி போன்ற கருத்துக்கள் அடங்கிய 58 நிமிட ஐக்கிய நாடுகள் சபை உரை, ஆங்கில ஊடக உலகின் புகழ்பெற்ற ராஜதந்திர ஆய்வாளர் பற்றிக் வின்ரூர் அவர்களை 'இனிமேல் உலகம் அமெரிக்காவை வலிமையான தலைமையாகப் பார்க்காது என்பது தெளிவாகியுள்ளது-ஐக்கிய நாடுகள் சபையின் விழுமியங்களைப் பிய்த்து எறிந்த அந்த உரை ட்ரம்பின் திட்டங்களுக்கு எதிரான பலமான அணியொன்றின் தேவையை உணர்த்தியுள்ளது" (Trump's UN speech makes it clear: the world can no longer look to the US for strong leadership - US president's speech made a mockery of UN values and highlights the need for strong anti-Trumpian alliances) என எழுதவைத்துள்ளது. அதுமட்டுமல்ல பற்றிக் வின்ரூர் பிரேசிலின் அரசத்தலைவர் லூயிஸ் இன்னாசியோ லூலா டா சில்வா அமெரிக்க அரசத்தலைவரின் உரை நாடுகளின் இறைமை மேலான தாக்குதல்களையும், காரணமற்ற தடைகளையும், ஒருதலைப்பட்சமான தலையீடுகளையும் உலகச் சட்டாக்கியுள்ளது எனக் குறிப்பிட்டு ஐக்கிய நாடுகள் சபையை உருவாக்கிய சென்பிரான்சிஸ்கோ நாட்டினரின் முக்கிய நோக்குகளையே அழித்து விட்டது எனவும் கூறி பணத்தை வழிபடும் அறியாமையை வளர்க்கும் உடல்நிலையிலும் டிஜிட்டல் நிலையிலும் இராணுவமயப்படுத்தலை நடைமுறைப்படுத்தி ஊடகசுதந்திரத்தை இல்லாதொழிக்கும் செயற்பாடுகளை உரை ஊக்குவிக்கிறது எனக் குறிப்பிட்டமையையும் மீள் நினைவுபடுத்தியுள்ளார்.

தென்கொரிய அரசத்தலைவர் லீ ஜே மையுங் (Lee Jae Myung) காலநிலைச் சீர்கேடு வெறும் புரளியல்ல உலகில் மனிதாயத்துக்கான பேராபத்து. இந்நிலையில் உலகம் அமெரிக்காவின் உதவியின்றி இதனை எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறது என்ற கேள்வியை எழுப்பியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளதையும் பற்றிக் வின்ரூர் மீள்பதிவிட்டுள்ளார். ரொனி பிளேயரின் தலைமையில் அமைக்கப்பட உள்ள நாடுகடந்த பலஸ்தீனிய ஆட்சி மூலம் காசாவை பலஸ்தீனியர்களுக்கு உரியதாகக் கட்டியெழுப்ப இஸ்ரேயல் அனுமதிக்காது என்பதை நத்தன்யாகூவின் ஐ. நா. உரை மிகத் தெளிவாக்கியுள்ளது. எனவே பலஸ்தீனியப் பிரச்சினை தொடர்கதையாகவே தொடரும் என்பதே நடைமுறையாகவுள்ளது. இதே நிலைதான் ஈழத்தமிழருக்கும் 2009 முதல் தொடர்கிறது என்பதும் இவ்விடத்தில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயம்.

அதே வேளை சீன ரஸ்ய வடகொரிய கூட்டில் சீனா நடத்திக்காட்டிய நவீன படையணி வகுப்பும், சீனாவின் முதலாவது மின்காந்த உந்து கணை தொழில்நுட்பம் கொண்ட விமானம் தாங்கிக் கப்பல் சி என் எஸ் புஜியானின் அதிசக்தி வாய்ந்த போர்விமானங்களான ஜே-15 டி, ஜே -35 மற்றும் கே. ஜே 600 ஆகியவற்றை உந்தித்தள்ளி வெள்ளோட்டமானதும், இந்திய மிக் 21 போர் விமானங்களுக்குப் பிரியாவிடை கொடுத்து புதிய சக்தி படைத்த விமானங்களையும் டாங்கிகளையும் பயிற்சித்துப் பார்த்தமையும், ஆசியாவினதும் குளோபல் சவுத்தினதும் பலத்தின் உலக பிரகடனமாக அமைந்துள்ளது.

இந்நிலையில் 2009க்குப் பின் 700 போர்க்கப்பல்களை இலங்கைத்துறைமுகத்தில் பயிற்சிக்குவரவைத்த சிறிலங்கா நினைத்துப் பார்க்க இயலாத அளவுக்கு பில்லியன் ரூபாக்களைச் செலவு செய்து தனது கடற்படையை நவீனப்படுத்திக் கொண்டு 33 நாடுகளை இணைத்து "மாறிவரும் இயக்கவியலின் கீழ் இந்தியப் பெருங்கடலின் கடல்சார் கண்ணோட்டம்" என்ற மையப்பொருளில் 12வது ஆண்டாக காலி கடற்படைகளுக்கான கலந்துரையாடலை நடாத்தியதும் முக்கியமான விடயம்.

இதில் சிறிலங்காவின் பிரதமர் "இந்துமாக் கடலின் மையத்தில் அமைந்துள்ள இலங்கையின் அமைவிடம் அதிசயமானது. அதனை நாம் ஆக்கிரமித்துள்ளோம். இந்துமாக்கடல் உலகின் மிக நீடிக்கப்பட்ட மூலோபாய கடல்சார் களங்களில் ஒன்றாகும். இது வர்த்தகம் மற்றும் எரிசக்தி பாதுகாப்புக்கான உயிர்நாடியாக உள்ளது. இதனை நாம் இந்து மாக்கடல் அமைதியாகவும், பாதுகாப்பானதாகவும் நிலையானதாகவும் நியாயம் மற்றும் ஒத்துழைப்பு மூலம் ஆளப்படவும் அனைத்துப் பங்காளிகளுடனும் இணைந்து பணியாற்றுவதே இலங்கையின் அர்ப்பணிப்பாகும்" எனக் கூறியுள்ளார்.

இந்த இலங்கையைச் சுற்றியுள்ள இந்துமாக்கடலின் ஐந்தில் மூன்று பகுதிக்கு உரிமையாளரான ஈழத்தமிழர்கள் இந்த வலிமைகள் குறித்து வாய்திறந்ததே இல்லை. 1991இல் தமிழீழ உட்கட்டுமானங்கள் குறித்த யாழ்பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தமிழீழ மேம்பாட்டுப் பேரவையின் நூல் மட்டுமே இவை குறித்துப் பேசின. ஆனால் அதனையாவது முன்னிறுத்தி இதுவரை ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் அனைத்துலகச் செயற்பாட்டாளர்கள் அனைத்துலகத்துடன் எந்த வித பொருளாதார வர்த்தக திட்டமிடலையும் மேற்கொண்டதில்லை. ஆனால் சிறிலங்கா ஈழத்தமிழரின் கடலை வானை நிலத்தை தான் ஆக்கிரமித்த நிலையில் அதனைத் தனதாக உலகிற்கு அறிவித்துத் தனது உலகப் பாதுகாப்பை உலக பொருளாதார உதவிகளை பெற்று வளர்கிறது என்பதே நடைமுறையாகவுள்ளது. இதற்குக் காரணம் ஈழத்தமிழர்கள் தங்கள் தயாகத்தின் நிலத்தைக் கடலை வானை வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் இன்று வரை தாங்கள் வாழ்வாதரமாகக் கொண்டுள்ளோம் என்கின்ற மக்கள் இறைமையை உலகிற்கு வெளிப்படுத்தாமையே.

இவ்வாறு ஈழத்தமிழ் அரசியல்வாதிகளும் அனைத்துலகச் செயற்பாட்டாளர்களும் மக்கள் இறைமைக்கு முக்கியத்துவம் கொடுக்காது சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற சிறிலங்காவின் அரச இறைமைக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தமையே இன்று ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தாங்கள் செயலிழந்து நிற்பதற்கு மூலகாரணமாகிறது. சிறிலங்கா குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் இவ்வாண்டுக்கான திருத்தப்பட்ட வரைவு அறிக்கை உலகுக்கு இதனை மீண்டும் தெளிவாக்கியுள்ளது. இதற்கான வாக்களிப்பு என்பது சிறிலங்கா அரசாங்கத்தின் உள்ளகப் பொறிமுறைகளுக்கு மதியும் நிதியும் தொழில்நுட்பத் திறனும் வழங்கும் நடைமுறைக்கான ஏற்புடைமைச் செயற்பாடாகவே அமையவுள்ளது. இதனையும் கூட இந்த வடிவில் ஏற்க மறுத்து சிறிலங்காவின் இறைமைக்குள் எந்த விதத்திலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தலையீட்டை அனுமதிக்க மறுக்கும் சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தின் வீரகேசரிச் செவ்வி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் காணாமல்தான் போனார்களா என்பதை முதலில் ஆராயப்பட வேண்டும் எனவும் இந்தியாவுடன் இணைப்புப்பாலம் தேவையற்றது எனவும் தெளிவாக உலகுக்கு விளக்கியுள்ளது. இவ்வாறு ஈழத்தமிழர் மேல் சிறிலங்கா மேற்கொண்ட இனஅழிப்புக்கு எந்தவொரு பரிகாரநீதியோ அல்லது இனஅழிப்பு செய்தவர்களுக்குத் தண்டனை நீதியோ தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தாலும் அந்த வடிவில் மேற்கொள்ளப்படாது யுத்த்தின் விளைவு என்ற கோத்தபாய பாணியிலேயே செயற்பாடுகள் அமையும் என்பது உறுதியாகி வருகிறது. இதே வெளிவிவகார அமைச்சர் யேர்மனிய, பின்லாந்து, மாலைதீவு வெளிவிகார அமைச்சர்களை அமெரிக்காவில் சந்தித்தார் என்பதும் முக்கியமான விடயம்.

சீனா கொழும்பில் தனது இன்றைய அரசமுறைமையின் 76 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடிய விழாவில் ராஜபக்சாக்கள் இருவரும் சிறிசோனவும் முன்னாள் அரசத்தலைவர்கள் எனக் கலந்து கொண்டனர். தேசிய மக்கள் சக்தியின் ரில்வின் டி சில்வாவும் அங்கிருந்தார். அங்கு சிறிலங்காவுக்கு அதன் முன்னேற்றத்திற்குச் சீனா முழுஅளவில் உதவும் என்ற வாக்குறுதி வழங்கப்பட்டது. அமெரிக்காவில் அதே காலத்தில் சிறிலங்காவின் அரசத்தலைவர் அமெரிக்க அரசத்தலைவர் தென்னாபிரிக்கா அரசத் தலைவர் இந்திய வெளிவிகார அமைச்சர் ஆகியோருடன் நடாத்திய தனிப்பட்ட கலந்துரையாடல்கள் சிறிலங்காவின் இன்றைய தேவைகளுக்கான உரையாடலாக அமைந்தது. அடுத்து அநுரகுமார திசநாயக்காவின் ஐக்கிய நாடுகள் சபையின் உரை ஊருக்கு உபதேசம் எனக்கும் உனக்கும் இல்லையடி என்ற கதையாக உலகின் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் வளரச்சிகளுக்கும் வழிகாட்டும் அற்புதமான உரையாகவே அமைந்தது.

நம்மைப் பிரிக்கும் பயணத்திற்குப் பதிலாக கைகளை இணைக்கும் பயணத்தை மேற்கொள்ள வேண்டுமென உருக்கமான அழைப்பை உலகிற்கு விடுத்தார். பலஸ்தீனத்தை அங்கீகரித்தது மட்டுமல்லாது இஸ்ரேலிய பலஸ்தீனிய மக்களின் மனங்களைப் புரிந்து கொண்டு அவர்கள் இருபகுதியினருக்குமான எதிர்காலத்தை உருவாக்குவதே அங்கீகாரத்தை விட அதிக முக்கியம் என்பதையும் உலகிற்குத் தெளிவாக்கிளார். ஆனால் இலங்கையில் வடக்கு கிழக்கு தமிழரின் அரசாக யாழப்பாண வன்னியரசாக இருந்த நிலப்பரப்பு என்கின்ற வரலாற்று உண்மையை அவர் ஏற்க மறுக்கின்றார்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை அரசியலமைப்பில் இணைக்க முயற்சிக்கவில்லை. அவருடைய சிறிலங்காப்படை தனது 76 வது ஆண்டு நிறைவை அவர் அமெரிக்காவில் உரையாற்றிய எச்சில் காய்வதற்கு இடையிலேயே எட்டு பௌத்த பீடங்களுக்குமான 'அடமஸ்தந்திபதி' முனைவர் பல்லேகம ஹேமரத்தினநாயக்க தேரரின் தலைமையிலேயே கொண்டாடத் தொடங்கி சிறிலங்கா எத்தகைய மதசார்பற்ற தன்மையைக் கொண்டுள்ளது என்பதை நிரூபித்தது.

இதே நேரத்தில் செப்டெம்பர் 26 இல் நல்லூர் முதல் உலகெங்கும் தியாக தீபம் திலீபனின் 38வது நினைவேந்தலில் ஈழத்தமிழர்கள் "மக்கள் போராட்டம்" சனநாயக வழிகளில் தொடர்கிறது என்பதைத் திரண்டெழுந்து உலகிற்கு உறுதியளித்துள் ளனர். இதனை தாயகத்திலும் அனைத்துலகிலும் உள்ள ஈழத்தமிழர்கள் தங்களின் ஒருமைப்பாட்டுடனான செயலணிகள் மூலம் இறைமை குறித்த தெளிவை உலகிற்கு மீளுறுதி செய்வதன் வழி நடைமுறையாக்க வேண்டும் என்பதே இலக்கின் இவ்வார எண்ணம். இளைய ஈழத்தமிழர்கள் தலைமையேற்று இதனை நடைமுறைப்படுத்தாவிடில் காலநீடிப்பு ஏற்படும் என்பதும் இலக்கின் தெளிவான சிந்தனையாகவுள்ளது.

**ஆசிரியர்**

# தியாகதீபம் திலீபனின் நினைவுநாள் நிகழ்வுகளில் இருந்து...



















# ஐ.நா.வின் புதிய பிரேரணை
# எதிர்பார்ப்புக்களை சிதைத்த வெற்றுக் கடதாசி ஆவணம்

விதுரன்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகள் முன்வைத்த இலங்கை தொடர்பான புதிய பிரேரணை வரைவு தொடர்பில் ஏற்கனவே கடந்த வாரம் ஆராய்ந்திருந்தோம்.

குறித்த வரைவு, 'உள்ளகப்பொறிமுறையை' ஏற்றுக்கொள்ளும் வகையில் மிகத் தெளிவான உள்ளடக்கத்தை கொண்டிருந்ததையும் சுட்டிக்காட்டியிருந்தோம்.



இத்தகைய பின்னணியில் தற்போது அந்த வரைவை மையப்படுத்திய கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள், தமிழ் மக்களின் நீண்டகால நீதிக் கோரிக்கைகள் மற்றும் அரசியல் அபிலாசைகள் ஆகியவற்றை சர்வதேச அரங்கில் முழுமையாக நீர்த்துப் போகச் செய்துள்ளன.

முதலாவது வரைவில் இருந்த பல முக்கிய அம்சங்கள் நீக்கப்பட்டிருப்பதானது, இலங்கை அரசாங்கத்தின் அழுத்தங்களுக்கு சர்வதேச சமூகம் அடிபணிந்ததா என்ற கேள்வியை எழுப்புவதுடன், 'ஜெனிவா' பொறிமுறையின் நம்பகத்தன்மை குறித்தும் தமிழ் மக்கள் மத்தியில் ஆழமான சந்தேகங்களை உருவாக்கியுள்ளது.

குறித்த திருத்தப் பிரேரணையில் தமிழ் மக்கள் எதிர்பார்த்த எந்தவொரு திடமான உத்தரவாதமோ, நீதிக்கான பொறிமுறையோ இல்லை. அது வெறுமனே பெயரளவிலான கடதாசி ஆவணமாகவே காணப்படுகின்றது. இதனை நிறைவேற்றுவதாலே அல்லது நிறைவேற்றுவதாலோ விடுவதாலே பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எந்த வொரு பலனும் இல்லை.

விசேடமாக இதுகால வரையிலும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினால் இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமைகள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் சம்பந்தமாக பொறுப்புக்கூறல் செய்வதற்கான எந்த அதிகாரமும் இல்லை என்பது வெளிப்படையானது.

இருப்பினும், இலங்கை சம்பந்தமான பிரேரணைகளால் 'பொறுப்புக்கூறல் விவகாரம் சர்வதேச அரங்கில் உயிர்ப்புடன் இருக்கும்' என்ற ஆகக்குறைந்த நம்பிக்கையாவது இருந்தது. ஆனால் இப்போது அந்த நம்பிக்கையும் தகர்க்கப்பட்டுள்ளது.

இணை அனுசரணை நாடுகளின் திருத்தப்பட்ட வரைவின் மிக ஆபத்தான அம்சம், இலங்கையில் ஏழு தசாப்தங்களாக நிலவும் தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படையை மூடி மறைக்கும் வகையில் செய்யப்பட்டிருக்கும் சொற்பத மாற்றம் தான்.

அதாவது, முதலாவது வரைவில், 'பல தசாப்தகாலமாகத் தொடர்ந்த இனவாத மற்றும் பிரிவினைவாத அரசியல் நடவடிக்கைகளினாலும், இனப்பிரச்சினையினாலும் மிகையான பாதிப்புக்களும், துன்பங்களும் ஏற்பட்டுள்ளன' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், தற்போதைய திருத்தத்தின் மூலம் 'இனப் பிரச்சினை' என்ற சொல் முற்றாக நீக்கப்பட்டு, வெறுமனே 'மோதல்' என்ற வார்த்தை பிரதியிடப்பட்டுள்ளது. இது ஆச்சரியமானது. 'ஐ.நா.வில் வேலை செய்கின்றோம்' என்று கூறும் உள்நாட்டு, புலம்பெயர் அமைப்புக்களின் செயற்பாடுகள் விளைவு இதுவா என்ற கேள்வியையும் ஒருங்கே எழுப்புகின்றது.

இலங்கையில் நடந்தது வெறுமனே இரண்டு தரப்பினருக்கிடையேயான ஒரு 'மோதல்' அல்ல. இனரீதியான திட்டமிட்டு கட்டமைக்கப்பட்ட அழிப்புக்களும், ஆக்கிரமிப்புக்களுமாகும். அரசாங்கத்தின் பாகுபாடுகள் மற்றும் அரச இயந்திரங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகள் ஆகியவற்றின் விளைவாக எழுந்தவொரு தேசிய இனப் பிரச்சினையாகும்.

இப்பிரச்சினையின் மூல காரணிகளை தொடர்ச்சியாக ஆட்சியிலிருக்கின்ற அரசாங்கங்கள் மறுதலித்து வரும் நிலையில், சர்வதேச ஆவணத்தில் இருந்தும் இந்தப் பதத்தை நீக்குவதானது, இலங்கையின் 'பௌத்த மையவாத சிங்கள தேசியவாத' அரசியலுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தங்களது நீதிக்கோரிக்கைளையும் கூடவே நியாயமான, நிரந்தரமான அரசியல் தீர்வைக் காண்பதற்கு சர்வதேச அழுத்தம் வெகுவாக இருக்க வேண்டும் என்றே பாரிய நம்பிக்கையைக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால், சர்வதேச அரங்கொன்றில் தீர்மானமாக நிறைவேற்றப்படவுள்ள பிரேரணையில் தேசிய இனப்பிரச்சினை என்பது நீக்கப்படுகின்றது என்றால் அது அதற்குப் பின்னர் உள்நாட்டில் காணப்படும் ஆட்சியாளர்கள் பிரச்சினைகளின் ஆழமான வேர்களை ஒப்புக்கொள்ள மறுக்கும் சூழலில் தீர்வு எவ்வாறு கிடைக்கும்?

இதேபோன்று தான், கடந்த கால மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்துக்கு எதிரான குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறுதலை உறுதிசெய்வதற்கு சர்வதேச நீதிப் பொறிமுறையை பாதிக்கப்பட்ட மக்கள் வலியுறுத்தி வருகின்றார்கள்.

ஆனால் அந்த வலியுறுத்தல்களை எல்லாம் பொருட்டாக கொள்ளப்படாது வரைவில் ஆரம்பத்தில் உள்நாட்டு பொறிமுறையை அங்கீகரிக்கும் வகையில் 'சர்வதேச மனிதாபிமானச் சட்டத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்காகச் சுயாதீன சிறப்பு வழக்குத்தொடுநர் பங்கேற்புடனான பிரத்தியேக நீதித்துறை பொறிமுறையொன்றை நிறுவுவது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தவேண்டும்' என்று வலியுறுத்தப்பட்டிருந்தது.



இந்த வலியுறுத்தலானது, பாதிக்கப்பட்ட மக்களின் நீதிக்கோரிக்கையை முழுமையாகநிராகரிப்பதாக இருந்த நிலையிலும், ஆகக் குறைந்தது நீதிப்பொறிமுறை பற்றிய உரையாடலாவது நீடிக்கின்றது என்றவொரு நிலைமை காணப்பட்டது. ஆனால், தற்போது உள்ளகப்பொறிமுறையாக முன்மொழியப்பட்ட அப்பகுதி நீக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், போர்க்கால மீறல்களுக்குப் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கானதிடமான சர்வதேச நடவடிக்கைகளுக்கு எள்ளளவிலான வாய்ப்புக்களும் இல்லையென்பது உறுதியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலைமையானது, ஐ.நா.வை

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

கட்டுரை

# “வெல்வதற்காக இல்லை சொல்வதற்காகவே தமிழ்ப்பொதுவேட்பாளர்”

## ஜனாதிபதி தேர்தல் ஓராண்டு நிறைவுப்பகிர்வு!

தந்தை செல்வா நிறைவேற்றிய இணைந்த வடகிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை அடிப்படையாக கொண்டு தந்தை செல்வா 1949 டிசம்பர்18 ல் ஆரம்பித்த இலங்கைத்தமிழ் அரசுக்கட்சின் கொள்கையை மீண்டும் உறுதிப்படுத்தும் நோக்கில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தி வடகிழக்கு மக்களின் ஒன்றுபட்ட பலத்தை நிருபிக்க வேண்டும் என்ற கொள்கைக்காக வடகிழக்கில் உள்ள 83 குடிசார் சிவில் அமைப்புகள் 07 தமிழ்த்தேசிய கட்சிகள் 70 புலம்பெயர் அமைப்புகள், யாழ், கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் அமைப்பு, சகல முன்னாள் போராளிகள் அமைப்பு, கல்விச்சமூகம், தமிழ் புத்திஜீவிகள் என பலதரப்பட்டவர்களின் ஒருமித்த முடிவாக “தமிழ் பொதுவேட்பாளர்” என்ற பெயருடன் பா.அரியநேத்திரன் வேட்பாளராக முதல் தடவையாக நிறுத்தப்பட்டார். அவர்கள் தேர்தல் ஆணைக்குழுவில் சுயேட்சை சின்னமாக ‘சங்கு’ சின்னத்தை தேர்ந்தெடுத்தார்.



இதற்கு முந்திய தேர்தல்களிலும் தமிழ் வேட்பாளர்கள் போட்டியிட்டனர் அவர்கள் தனி வேட்பாளர்களாக வடகிழக்கை சேர்ந்த வேட்பாளர்களாக போட்டியிட்டனர்.

1982 அக்டோபர்20ல் முதலாவது ஜனாதிபதி தேர்தலில் 06 வேட்பாளர்கள் போட்டியிட்டனர் அதில் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகவும் கொழும்பை கொழும்பு வதிவிடமாகவும் கொண்ட குமார் பொன்னம்பலம் அவரின் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி மூலமாக ஒரு தமிழ் வேட்பாளராக சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்டு 173937வாக்குகளை பெற்று 04 வது இடத்தை பெற்றார்.

1988,1994,2005,ஆகிய மூன்று ஜனாதிபதி தேர்தல்களில் தமிழர்கள் வேட்பாளராக எவரும் போட்டியிடவில்லை. 2010 ஜனவரி 26 ல் ஜனாதிபதி தேர்தலில் 22 வேட்பாளர்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து எம்.கே.சிவாஜிலிங்கம் தமிழராக போட்டியிட்டு 09 வது இடத்தில் 9662 வாக்குகளை பெற்றிருந்தார்.

2015 ஜனவரி 08 ஜனாதிபதி தேர்தலில் 19 வேட்பாளர்களில் வடகிழக்கு சாராத தமிழர் சுந்தரம் மகேந்திரன் என்பவர் போட்டியிட்டு 4037 வாக்குகளை பெற்று 13வது இடத்தைப்பெற்றார்.

2019நவம்பர் 16ல் 34 வேட்பாளர்களில் காத்தான்குடி எம்.ஏ.எம் ஹிஷ்புல்லா, யாழ்ப்பாணத்தில் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும் போட்டியிட்டனர் ஹிஸ்புல்லாவுக்கு 38814 வாக்குகள் பெற்று 05ம் இடமும், சிவாஜிலிங்கம் மீன் சின்னத்தில் 12256 வாக்குகளை பெற்று 11வது இடமும் கிடைத்தது.

இறுதியாக கடந்த 2024 செப்டம்பர் 21 ஜனாதிபதி தேர்தலில் 39 வேட்பாளர்களில் தமிழ் பொதுவேட்பாளராக மட்டக்களப்பில் இருந்து பா.அரியநேத்திரன் நிறுத்தப்பட்டு 05 வது இடத்தில் 226343 வாக்குகளை பெற்றார்.இந்த தேர்தலில் மலையகத்தை சேர்ந்த எம்.திலகராஜ் என்பவரும் தமிழராக போட்டியிட்டு 2138 வாக்குகளை பெற்று 36 வது இடத்தை பெற்றார்.

1982 தொடக்கம் 2024 வரை 08 ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றுள்ளது அதில் ஒரு தமிழ் வேட்பாளர் (பா.அரியநேத்திரன்) கூடிய வாக்குகளை பெற்ற தேர்தல் 2024 தேர்தல் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.



தமிழ் பொதுவேட்பாளர் இலங்கை ஜனாதிபதியாக வெற்றிபெற போட்டியிடவில்லை ஈழத்தமிழர்களுடைய அபிலாஷைகளை சொல்வதற்காகவே போட்டியிட்டார்.

இதில் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியை சேர்ந்த சிலர் தமிழ் பொதுவேட்பாளரை எதிர்த்து சஜீத் பிரேமதாச எந்த ஒரு அரசியல் பொதுக்கொள்கையும் இன்றி தமிழ் பொது வேட்பாளரை தோற்கடிக்க வேண்டும் என்ற ஒரே கொள்கையுடன் ஆதரித்தனர். வடகிழக்கில் எங்கும் சஜீத் பிரேமதாசவின் துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள், வீடுவீடாய் சென்று பிரசாரங்களில் ஈடுபட்டனர்.

தமிழ்தேசிய மக்கள் முன்னணியினர் ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிக்குமாறு கோரி அவர்களும் தமிழ் பொதுவேட்பாளருக்கு வாக்களிக்காமல் பிரசாரம் செய்தனர்.

தேர்தல் 2024 செப்டம்பர் 21 ல் முடிவுற்றது தமிழ் பொது வேட்பாளருக்கு 226343 வாக்குகள் கிடைத்து இலங்கை வரலாற்றில் ஐந்தாம் இடம் கிடைத்தது. ஏனைய நான்கு இடங்களில் முதல் நான்கு இடங்களைப்பெற்றவர் இலங்கை அரசியலில் பிரபலமான சிங்களத்தலைவர்கள்.

**1. தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கா.**

**2. முன்னாள் ஜனாதிபதி பிரமதாசாவின் மகன், தற்போதைய எதிர்கட்சி தலைவர் சஜீத்பிரமதாசா.**

**3. முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பிரதமர், முன்னாள் எதிர்கட்சி தலைவர், ஐக்கியதேசியகட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க.**

**4. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன், முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ.**

**5. தமிழ்பொதுவேட்பாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்.(ஒரு தமிழன்)**

### பா. அரியநேத்திரன்

தேர்தல் முடிவுகள் வந்த பின்னர் தமிழ் பொதுவேட்பாளரை எதிர்த்து பிரசாரம் செய்தவர்களுக்கு இரண்டு இலட்சத்துக்கு மேல் வாக்குகள் பெற்றது ஆச்சரியமாக இருந்தது.

ஏனெனில் சில ஆயிரம் வாக்குகளை மட்டுமே பெறுவார் என்று எதிர்பார்த்தவர்களுக்கு அதிர்சியை கொடுத்தது. அதனால் தமிழ் பொது வேட்பாளரை மக்கள் ஒரு பொருட்டாக எடுக்கவில்லை என தமிழரசுக்கட்சி பதில் செயலாளர் எம் ஏ சுமந்திரன் ஊடகங்களில் கருத்து கூறியும் இருந்தார். அவருடைய கருத்துப்படி தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களித்த 226343 தமிழர்களும் தமிழ் பொதுவேட்பாளரை ஒரு பொருட்டாக கருதி வாக்களித்தனர் என்பதை கூற மனம் வரவில்லை.

தமிழ் பொதுவேட்பாளரை எதிர்த்து தமிழரசுக்கட்சியில் சிலரும், தேர்தலை பகிஷ்கரிக்குமாறு பிரசாரம் செய்த தமிழ்தேசிய மக்கள் முன்னணியும் ஏனைய தமிழ் அமைப்புக்களைப்போன்று தமிழ் பொதுவேட்பாளரை ஆதரித்திருப்பின் ஏறக் குறைய ஆறு இலட்சம் வாக்குகள் தமிழ் பொதுவேட்பாளருக்கு கிடைத்திருக்கும் என்பது உண்மை.



சஜித் பிரேமதாசவை ஆதரித்த தமிழரசுக் கட்சியில் உள்ளவர்கள் கூறிய கருத்து அவரே வெற்றிபெறுவார் அவரே ஜனாதிபதியாக தெரிவாகுவார் அதனால் ஆதரிப்பதாக கூறினர் வேறு எந்த கொள்கைக்காகவும் அவரை ஆதரிக்கவில்லை அவர்களின் தப்புக்கணக்கு இறுதியில் அவர்களுக்கே முகத்தில் கரிபூசியது அநுரா ஜனாதிபதியானார்.

தமிழ் பொதுவேட்பாளர் வெல்வதற்கு அல்ல சொல்வதற்கு என்ற ஒரே காரணமே கூறப்பட்டது, சொல்வது என்றால் போர் 2009 மே 18 ல் முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்டும் 16 வருடங்கள் கடந்தும் கொள்கை மௌனிக்கப்படவும் இல்லை, மரணிக்கப்படவும் இல்லை என்பதை சர்வதேசத்துக்கு ஒரு கருத்துக்கணிப்பாகவே ஜனாதிபதி தேர்தலை ஈழத்தமிழ் அமைப்புகள் பயன்படுத்தியது என்பதே உண்மை.

தற்போது ஜனாதிபதி தேர்தல் முடிந்து ஒருவருடம் கடந்த நிலையில் தேசியமக்கள் சக்தி 159 ஆசனங்களை பெற்று பெரும்பான்மை பலத்துடன் ஜனாதிபதி அநுர தலைமையில் ஆட்சி தொடர்கிறது.

ஒருவருடத்தில் வடகிழக்கு தமிழர்கள்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# படுகொலை செய்யப்பட்ட ஊடகர்களுக்கு நீதி கிட்டுமா?

ஜனநாயகத்தின் நான்காவது தூண்களில் ஊடகம் காணப்படுகிறது என்றிருந்த போதிலும், ஊடகவியலாளர்களின் பணி போற்றத்தக்கதுமாக இருந்தாலும் கடந்த காலங்களில் பல ஊடகவியலாளர்கள் வடகிழக்கு உட்பட நாட்டின் பல இடங்களிலும் படுகொலை செய்யப்பட்ட வரலாறுகள் உண்டு.

சுமார் 44 ஊடகவியலாளர்கள் இற்றை வரைக்கும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். ஆனாலும் கடந்த ஆட்சியாளர்கள் தொடக்கம் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வரை படுகொலை செய்யப்பட்ட ஊடகர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்ற குற்றச் சாட்டும் காணப்படுகிறது.

காலா காலாகாலமாக இவர்களுக்காக நினைவஞ்சலி நாள் அவ்வப்போது ஊடக துறை சார்ந்த ஊடக அமைப்புக்கள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களால் நினைவு கூறப்பட்டாலும் படுகொலைக்கான நீதிப் பொறி முறை ஊடான விசாரணை இன்றி காலத்தை கடத்துகின்றனர்.



தற்போது புதிய அரசாங்கத்திலும் ஊடக அடக்கு முறைகள் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஊடகர்கள் விசாரணைக்காக அழைக்கப்பட்டு பல மணி நேரங்கள் விசாரணை செய்து பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்ற நிலையும் காணப்படுகிறது.

அண்மையில் முல்லைத்தீவைச் சேர்ந்த இளம் புகைப்பட ஊடகவியலாளர் குமணண் பொலிஸாரால் விசாரிக்கப்பட்டிருந்தார். ஊடக சுதந்திரம் நாட்டில் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டு வருவதனை இது போன்ற சம்பவங்கள் ஊடாக காணக்கூடியதாக உள்ளது.

வடக்கில் யுத்த காலத்தின் போது பல போர் செய்திகளையும் அரசியல் செய்திகளுடனான ஊடக பணியில் இருந்த சிரேஷ்ட ஊடகர் ம.நிமலராஜன் 2000.10.19ம் திகதி இனந்தெரியாத ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்ட போதும் அவருக்கான நீதி கிடைக்கவில்லை.

இதன்ஒருகட்டமாகநிமலராஜனின்வழக்கு தொடர்பான அறிக்கை வெளியீடு வடகிழக்கின் தமிழர் தாயகப் பகுதியில் வெளியிட்டு விநியோக நடவடிக்கைகள் இடம் பெற்றது.

இவ்வாறாக இது குறித்து திருகோணமலையை சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் கலாநிதி ராமநாதன் ஸ்ரீ ஞானேஸ்வரன் தெரிவிக்கையில் ஒரு இனத்தின் முக்கியமானவர்களை தனித் தனியாக தேர்ந்தெடுத்து கொலை செய்வது இனப்படுகொலையாகத்தான் கருத வேண்டும். இனப்படுகொலைக்கான சட்டமும் இனப்படுகொலைக்கான நீதியும் அவர்களுக்கு உரித்தானது என்பது தவிர்க்க முடியாத பிரயோகத்திற்குள் வருகின்றது. நிமலராஜனின் கொலை அதுபோன்ற ஊடகவியலாளர்கள் 44 பேரின் கொலை அனைத்துமே தமிழினப்படுகொலையின் ஒரு கூறாகவே இந்த இடத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.



அவருடைய விசாரணை அறிக்கை இவ்வளவு காலத்துக்கு பிறகு வெளிவருவதென்பது ஒரு உண்மையை நோக்கிப் போராடுகின்ற ஒரு மனிதனின் மரணமும் அவருடைய சாவின் பின்னும் போராட்டத்தை முன்நகர்த்தும் என்பதற்கு மிக முக்கியமானதொரு ஆதாரமாக மிக முக்கியமான செய்தியாக இந்தக் கணத்தில் இங்கு பதிவு செய்யப்பட வேண்டும். ஏன் நாங்கள் போராடுகின்றோம் ஏன் இவ்வளவு இவ் நிகழ்வை செய்கின்றோம் என்றால் சுயநிர்ணய உரிமைகளுக்காக முன் நகரக் கூடியவர்களாக இருக்கின்றோம்.

ஏன் இந்த சுயநிர்ணய உரிமை முக்கியத்துவம் வாய்ந்தது என்றால் பன் னாட்டு சட்டத்தின் பொருளின் படி பொருள் கோரலின் படி இந்த பன்னாட்டு சட்டத்தினை கையகப்படுத்த வேண்டியவர்களாக அல்லது பன்னாட்டு சட்டத்தின் கீழ் கருத்திற் கொள்ளப்பட வேண்டியவர்களாக உலக நாடுகள் மட்டுமே கருத்திற் கொள்ளப்பட வேண்டிய நிலையில் ஏனைய பன்னாட்டு சட்டப் பொருள்களாக ஒரு இனம் கருத்திற் கொள்ளப்பட வேண்டுமாக இருந்தால் அந்த இனம் சுய நிர்ணய உரிமைக்காக தன்னுடைய தன்னாட்சிக்காக எங்களை பொருத்தமட்டில் போராடுகின்ற இனமாக இருந்தால் மட்டுமே அது பன்னாட்டு சட்டத்தின் சரத்துக்களை தரம் குறித்தாக்கி கொள்ளும் பண்பை கொண்டிருக்கின்றது.

ஆகவே இந்த உலகத்தில் நாங்கள் பன்னாட்டு சட்டத்தை எங்களுக்காக செயற்பட வைக்க வேண்டுமாக இருந்தால் நாங்கள் சுயநிர்ணய

**கிண்ணியான்**

உரிமைக்காக ஏதோ ஒரு வழியில் போராட தலைப்பட்டவர்களாக போராட முன் நகர்பவர்களாக இருந்தால் மட்டுமே தமிழினம் பன்னாட்டு விசாரணையை கோருவதற்கான ஆகக் குறைந்த தகுதியை கொண்டிருக்கின்றது.

ஆகவே இவ்வாறான போராட்டங்கள் மரணித்தவர்களை கொல்லப்பட்டவர்களை இனப்படுகொலைக்கு உள்ளானவர்களை நாங்கள் நினைவேந்துகின்ற இந்த போராட்டங்கள் கூட ஒரு இனத்தின் தன்னாட்சி சுய நிர்ணய உரிமைக்கான போராட்டமாக கருதப்படுவதோடு அதன் ஊடாகவே நாங்கள் பன்னாட்டு சட்டத்தை எங்கள் மீது பிரயோகிக்கத்தக்க வலுக்கொண்டவர்களாக மாற்றுவதற்கான இந்த முயற்சியின் ஒரு படியினை நாங்கள் இங்கு தாண்டுகின்றோம்.

இனப்படுகொலைக்கு உள்ளான ஈழத் தமிழ் ஊடகவியலாளர்களை நாங்கள் என்றென்றைக்கும் நினைவு கொள்வோம் என்றும் இனப்படுகொலைக்கான நியாயத்தை வேண்டி போராடுவோம்" என்றார்.

இது போன்று திருகோணமலையை சேர்ந்த சுப்பிரமணியம் சுகிர்தராஜன் 24.01.2006 ல் திருகோணமலையில் வைத்து சுட்டு கொல்லப்பட்டார்.



அச்சு மற்றும் வானொலி பத்திரிகையாளர் ஐயாத்துரை நடேசன் 31.05.2004ல் சுட்டு கொலை செய்யப்பட்டதுடன் பெரும்பான்மை இன ஊடகவியலாளரான பிரபல ஊடகர் லசந்த விக்ரமதுங்க 08.01.2009ல் சுட்டுகொல்லப்பட்டார்.

முஸ்லீம் சமூகத்தை சேர்ந்த நற்பிட்டிமுனை எழுத்தாளர் பலீல் 2005.12.10 ல் சுட்டுக் கொல்லப்பட்டார். இவ்வாறாக பல வழிமுறைகளில் படுகொலை செய்யப்பட்டு ஊடக சுதந்திரம் நீதி இல்லாமல் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

இது குறித்து திருகோணமலையை

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

# விவசாயப் பூமியைப் பெற சத்தியாக்கிரக போராட்டத்தில் முத்து நகர் விவசாயிகள்!



ஹஸ்பர்

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பகுதியை சேர்ந்த சுமார் 350க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்களது விவசாய நிலத்தை இழந்து தற்போது வரை போராடி வருகின்றனர். 1972 தொடக்கம் விவசாய செய்கையில் ஈடுபட்டு வந்த போது இலங்கை துறை முக அதிகார சபையினர் தங்களது காணி கள் என பதாகைகளுக்கு பெயரிட்டு 2023ல் இருந்து அப்பகுதி மக்களை வெளியேறுமாறு அச்சுறுத்தினர் முத்து நகர் மக்கள் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக விவசாய செய்கையை வாழ்வாதாரமாக செய்து வந்த போதிலும் தற்போதைய அநுர குமார அரசாங்கம் தனியார் கம்பனிகளுக்கு சூரிய மின் சக்தி உற்பத்திக்காக 200ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய நிலங்களை வழங்கி விவசாயிகளை விவசாயம் செய்ய விடாது வெளியேற்றியுள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர்.



இவ்வாறான நிலையில் பல போராட்டங்களை நடத்திய போதும் விவசாயிகளுக்கு தீர்வின்றி சோளர் பவர் திட்டத்துக்கான வேலைகளை தனியார் கம்பெனிகள் தற்போது ஆரம்பித்துள்ளனர்.

தொடர்ச்சியாக இது விடயமாக போராடிய போது திருகோணமலை நீதிமன்றத்தால் 22 விவசாயிகளுக்கு பெயர்குறிப்பிட்டு உள்ளே செல்ல முடியாத தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனால் விவசாயிகள் நொந்து விடாது தங்கள் நிலத்தை மீளப் பெற தொடர் போராட்டங்களை நடாத்தினர்.ஒரு முறை பெகோ இயந்திர வேலைகளுடன் விவசாய காணிக்குட் சென்று தடுத்து நிறுத்த முற்பட்ட போது கருத்து முரண்பாடு ஏற்பட்ட நிலையில் விவசாயிகளை தனியார் நிறுவன இயந்திர அடியாட்கள் தாக்கியதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்திருந்தனர். இதனால் அப்பாவி விவசாயிகள் சுமார் ஐந்து பேரை சீனக் குடா பொலிஸார் கைது செய்த னர் பின்னர் 14 நாட்கள் சிறைச்சாலையில் அடைக் கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர். விடுதலைக்காகவும் கைதை கண்டித்தும் சீனக் குடா பொலிஸ் நிலையம் முன்பாகவும் குறித்த விவசாய குடும்பங்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

நீதியை நிலைநாட்டவும் நில உரிமைகளை பெற கோரியும் உரியவர்களை வலியுறுத்தினார்கள். இதனைத் தொடர்ந்து தொடரான தீர்வில்லாத நிலையில் திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக இன்றுடன் ஒன்பதாவது நாளாக (2025.09.25) சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடு பட்டு வருகின்றனர்.

இதனோடு இணைந்து கொழும்பில் உள்ள பிரதமர் அலுவலகம் முன்பாக 24.09.2025 அன்று போராட்டத்திலும் ஈடுபட்டனர்.இவ் வாறான நிலை குறித்து முத்து நகர் விவசாய சம் மேளன செயலாளர் திருமதி சஹீலா சபூர்தீன் தெரிவிக்கையில், "கடந்த ஒன்பது நாட்களாக இன்றுடன்(25.09.2025) திருகோணமலை கச்சேரிக்கு முன்னால் சத்தியாக் கிரகப் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

எட்டாவது நாளில் கவனயீர்ப்பு திருகோணமலையில் ஒரு பகுதியினரும் 120க்கும் மேற்பட்டவர்கள் கொழும்பு பிரதம மந்திரி அலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோம். கடந்த காலத்தில் இரு முறை ஜனாதிபதி செயலகம் முன்பாகவும் ஆர்ப்பாட்டம் செய்து மனு கொடுத்திருந்தோம். ஜனாதிபதி செயலகத்தில் இரு செயலாளர்களை சந்தித்த போது அவர்கள் கூறியதாவது, ஆகஸ்ட் 30ம் திகதிக்குள் உங்களுக்கு நல்லதொரு தீர்வை தருவோம் என்று அதன் படி காத்திருந்து எங்களுக்கு இது வரை எந்த பதில்களும் கிடைக்கவில்லை.



இனி மேல் நாங்கள் திருகோணமலை கச்சேரியில் கவனயீர்ப்பில் ஈடுபட்ட போது சாதகமான பதில்கள் எட்டாமையால் தான் நாங்கள் கொழும்பு சென்றோம். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட எங்களை மாலை 5.30 மணியளவில் அங்கு அலுவலகத்தில் உள்ள அதிகாரிகள் எங்களுடன் பேசினார்கள் பிரதமர் பாராளுமன்றில் இருப்பதாக தெரிவித்தனர்.

பிரதமரின் செயலாளரை சந்தித்து பேசினோம். எங்கள் பிரச்சினைகளை ஐந்து பேர் கொண்ட குழுவுடன் ஆனாலும் பிரதமரை சந்திக்க வேண்டும் என்பதற்காக இரவு 9.30 மணி வரை காத்திருந்தோம். அரை மணித்தியாலயம் பொறுத்திருங்கள் என அதிகாரிகள் கூறினர். மேலும் மூவருக்கு உள்ளே செல்ல அனுமதி வழங்கப்பட்டது. அதில் நானும் சென்றேன். பிரதமரை சந்தித்து விவசாயிகளான எங்கள் முத்து நகர் நிலம் சூறையாடப்பட்டமை தொடர்பாக தெளிவுபடுத்தியிருந்தோம்.

விவசாயிகளுக்கு 800ஏக்கர் நிலமும் குளத்துடன் திருப்பி வழங்கப்பட வேண்டும் எனவும் இதனோடு ஒரு விடயத்தை அறிந்து கொள்ள வாய்ப்பு கிட்டியது. மூன்று கம்பெனிகள் ஒப்பந்தம் செய்துள்ளதாக இருந்த போதிலும் மீதமுள்ள பகுதிகளை விவசாயம் செய்ய விடுவித்து தருமாறும் கோரிக்கையினை முன்வைத்தோம்.



ஜூலை 23ல் மாவட்ட செயலகம் முன் இடம் பெற்ற போராட்டத்தின் போது வெளிவிவகார பிரதியமைச்சர் 10வீத நிலத்தை வழங்கியுள்ளதாகவும் எஞ்சிய நிலத்தை விவசாயிகளுக்கு வழங்கவுள்ளமை தொடர்பில் கூறியிருந்தார். ஆனால் இன்று விவசாயிகளின் நிலை 200 ஏக்கருக்கு மேல் கம்பெனிகளுக்கு வழங்கப்பட்டு முத்து நகர் குளம், தகர வெட்டுவான் குளம் மூடப்பட்டுள்ளது. பின் பகுதி இயந்திரத்தை கொண்டு இடித்து அழித்து வருகின்றனர். அங்கு செல்ல முடியாது எனவும் கூறினோம்.

உப்புவெளி கமநல சேவைகள் அதிகாரிகளுடனான கூட்டத்தில் மூன்று சம்மேளனங்களில் உள்ளவர்கள் 800 ஏக்கரில் விவசாயம் செய்ய முடியாது பெரும்போக நஷ்ட ஈடு தரப்படும் என கூறினார்கள். இதனை பிரதமரிடம் ஒட்டு மொத்தமாக எடுத்துரைத்தோம் இதற்கு பதில் அளித்த பிரதமர் இது தொடர்பில் தனக்கு தெரியாது என மீண்டும் நாங்கள் கூறியதாவது பத்து நாட்களுக்குள் தீர்வு வழங்க வேண்டும் என கூறினோம்.

இக் கோரிக்கையை ஏற்ற பிரதமர் தீர்வை உரிய அதிகாரிகளுடன் பேசி பெற்று தருவதாக கூறினார். இவ் அனைத்துக்கும் முடிவாக பிரதமரிடம் மீண்டும் நாங்கள் கூறியதாவது சாதகமான தீர்வொன்றை தராத பட்சத்தில் பிரதமர் அலுவலகம் அல்லது ஜனாதிபதி செயலகம் முன் சத்தியாக் கிரக போராட்டத்தை திருகோணமலையில் இருந்து வந்து தொடர்வோம் தொடர்ந்தும் போராடுவோம் என தெரிவித்தோம்"

குறித்த முத்து நகர் விவசாயிகளின் போராட்டத்தில் மக்கள் போராட்ட முன்னணியின் செயற்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# இலங்கையின் நீதித்துறை ஒருபோதும் நீதியை வழங்காது





## படுகொலை செய்யப்பட்ட மாணவனின் தந்தை நேர்காணல்

**2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி திருகோணமலையில் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தனது மகன் ரஜீகர் உட்பட்ட 5 மாணவர்களின் படுகொலைக்காக சர்வதேச அரங்கில் நீதிவேண்டிப் போராடிவந்த நிலையில் ஓய்வுபெற்ற வைத்தியர் திரு காசிப்பிள்ளை மனோகரன் அவர்கள் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி பிரித்தானியாவில் காலமானார். அவர் யூலை 2019இல் இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய நேர்காணலை அவர் நினைவோடு இங்கு மீள்பதிவாக்குகின்றோம்**

*2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் 2ஆம் திகதி மாலை திருகோணமலை கடற்கரை பகுதியில் மனோகரன் ரஜீகர் (பிறந்த திகதி 22.09.1985, அகவை 21), யோகராஜா ஹேமச்சந்திரா (பிறந்த திகதி 04.03.1985, அகவை 21), லோகிதராஜா ரோகன் (பிறந்த திகதி 07.04.1985, அகவை 21), தங்கதுரை சிவானந்தா (பிறந்த திகதி 06.04.1985, அகவை 21), சண்முகராஜா கஜேந்திரன் (பிறந்த திகதி 16.09.1985, அகவை 21) ஆகியோர் கடற்படையின் சோதனைச் சாவடியில் மறித்து வைக்கப்பட்டிருந்த போது அங்கு வந்த விசேட அதிரடிப்படையினர் நூற்றுக்கணக்கானோர் முன்னிலையில் மாணவர்களை சரமாரியாக சுட்டுக் கொன்றார்கள்.*

*மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் 2006 ஆம் ஆண்டு இந்த சம்பவம் இடம்பெற்றிருந்த போதிலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் கோரிக்கைகள் பல்வேறு போராட்டங்கள், சர்வதேச ரீதியான அழுத்தங்கள் காரணமாக சம்பவம் இடம்பெற்று 7 வருடங்களின் பின்னரே அதாவது 2013 ஆம் ஆண்டே சிறப்பு அதிரடிப்படையை சேர்ந்த உதவி பொலிஸ் அத்தியட்சகரொருவர் உட்பட 12 பேர் குற்றப்புலனாய்வுத் துறையினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர்.*

*அன்று முதல் வழக்கு நடைபெற்று வந்த நிலையில் கடந்த முதலாம் திகதி அன்று அனைத்து குற்றவாளிகளையும் போதிய ஆதாரங்கள் இல்லை என்று திருகோணமலை மாவட்ட நீதி மன்றம் விடுதலை செய்துள்ளது. இந்த தீர்ப்பு குறித்த மாணவர்களின் பெற்றோர்கள் உட்பட தாயகத்தில் நீதிக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் அனைவருக் கும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.IMG 20190706 WA0051 இலங்கையின் நீதித்துறை ஒருபோதும் நீதியை வழங்காது - படுகொலை செய்யப்பட்ட மாணவனின் தந்தை - நேர்காணல்*

*இந்நிலையில் படுகொலை செய்யப்பட்ட மனோகரன் ரஜீகரின் தந்தையான வைத்தியர் காசிப் பிள்ளை மனோகரன் இலக்கு மின்னிதழுக்கு மின்னஞ்சல் மூலம் தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். அதன் முழுவடிவம் வருமாறு,*

**2006ஆம் ஆண்டு நடைபெற்ற அந்த துன்பியல் சம்பவத்தால் நீதிக்காக கண்ணீருடன் காத்திருந்தபோது தற்போது வழக்கு விசாரணைகள் நடைபெற்ற நிலையில் போதிய ஆதாரங்கள் இல்லை என்று கூறி 13படையினர் விடுவிக்கப்பட்டுள்ளமையை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

*இந்த தீர்ப்பை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டேன். இதுவரை எனக்கு எந்த அழைப்பாணையும் அனுப்பப்படாமல் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவர்களின் விடுதலைக்கான காரணமாக போதிய ஆதாரங்கள் இல்லை என்று கூறப்பட்டுள்ளது. என்னிடம் போதிய அளவு ஆதாரம் உள்ளதால் இந்த தீர்ப்பை நான் முழுமையாக எதிர்க்கின்றேன்.*

**சிறீலங்கா நீதி என்பதை எதிர்பார்க்க முடியாத ஒரு நாடாகிவிட்டதென்பது மீண்டும் ஒரு முறை நிரூபணமாகி உள்ளது. புதிய உலக ஒழுங்கில் இதற்கான தீர்வாக நீங்கள் எதனை கருதுகின்றீர்கள்?**

*இலங்கை மீது சர்வதேச நாடுகளின் அழுத்தம் இல்லாதவரை தமிழர்களின் நீதிக்கான விடயங்களில் தான்தோன்றித்தனமாகவே செயற்பட்டுவரும் என்பதை உலகம் உணரும்வரை எமக்கான நீதி என்பது சாத்தியமற்றது. இதை உலக சமூகம் உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதே எனது கருத்து.*

**உள்நாட்டிலும் நீதி மறுக்கப்பட்டு சர்வதேச அரங்கிலும் நீதிக்கான பொறிமுறைகள் மிகக் கடுமையாக்கப்பட்டுள்ள நிலையில் எங்களைப் போன்றவர்களுக்காக குரல் கொடுக்கக் கூடியவர்கள் யார்? அல்லது உண்மையில் அதற்கான பொறிமுறை இந்த உலகத்திடம் உண்டா?**

*எமக்காக குரல் கொடுப்பதற்கு பல்வேறு தரப்பினர் உள்ளார்கள். தற்போதைய உலக ஒழுங்கிலும் எமக்கான நீதியை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது. ஆனால் எமது அரசியல் சிவில் சமூகங்களின் வேலைத்திட்டங்கள் பரந்த அளவிலே ஒன்றிணைந்து முழுமூச்சுடன் முன்னெடுக்கும் போது நிச்சயம் என்னைப்போன்ற நீதிக்காக ஏங்கும் அனைத்து தமிழ் மக்களுக்கும் நீதி கிடைக்கும். இந்த விடயத்திலே சர்வதேச சனநாயக விழுமியங்களுக்கு உட்பட்டு பொருத்த மான செயற்திட்டங்களை அனைவரும் ஒன்றி ணைந்து முன்னெடுத்தால் எமக்கான நீதியை சாத்தியப்படுத்த முடியும்.*

**இந்த வழக்கினை மேல் முறையீடு செய்வதன் ஊடாக இலங்கையின் நீதித்துறைக்குள் பாதிக்கப்பட்ட தரப்பினர் நீதியைப் பெற முடியும் என்று கருதுகின்றீர்களா?**

*இலங்கையின் நீதிக்கட்டமைப்பு அரசியல் தலையீடு இல்லாமல் சுயாதீனமாக இருந்திருந்தால் நாம் இன்று எமது பிள்ளைகளை இழந்திருக்கத் தேவையில்லை. இலங்கையில் தமிழ் மக்கள் தாக்கல் செய்த எந்தவொரு வழக்கிற்கும் நீதி கிடைத்ததாக நான் அறியவில்லை. அதை எமது வழக்கிலும் கண்டுகொண்டேன். ஆகவே மேன்முறையீடு செய்வதால் எவ்விதமான நியாயத்தினையும் இலங்கையின் நீதித்துறைக்குள்ளே பெற்றுக்கொள்ள முடியாது.*

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# அந்தரத்தில் மலையக அதிகார சபை



பெருந்தோட்ட மக்களின் உரிமைகள் குறித்து அவதானம் செலுத்தும் போது அதில் முக்கிய பங்கு வகிக்கும் மலையக அதிகார சபை என்ற பெருந்தோட்ட பிராந்திய புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பான கருத்தாடல்கள் தற்போது அதிகரித்துள்ளன. இந்த அதிகார சபையை அரசாங்கம் முடக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளமைக்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

பெருந்தோட்டங்களில் வாழும் மலையக மக்களை இந்நாட்டின் சம உரிமை அனுபவிக்கும் பிரஜைகளாக மாற்றும் நோக்கத்துடன் பழனி திகாம்பரம் அமைச்சராக இருந்தபோது 2018 இன் இறுதிக் காலப்பகுதியில் மிகுந்த சவால்களுக்கு மத்தியில் இந்த அதிகார சபை உருவாக்கப்பட்டது. இந்நிலையில் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் இந்த அதிகார சபைக்கு மீண்டும் ஒரு சோதனை வந்துள்ளது. இதன் பணிகளை பெருந்தோட்ட அமைச்சிடம் ஒப்படைத்துவிட்டு இதனை மூடிவிடவேண்டும் என்ற யோசனையை அமைச்சரவை நிறைவேற்றியுள்ளது.



தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்ததன் பின்னர் உயர்மட்ட நிர்வாக உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரு குழு டிசம்பர் 2024இல் நியமிக்கப்பட்டது. இக்குழுவினால் கடந்த பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது. ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க நிதி அமைச்சராக இத்தீர்மானத்திற்கு தனது உடன்பாட்டினை தெரிவித்திருக்கின்றார். அத்துடன், இந்த சிபாரிசினை நடைமுறைப்படுத்துவதை கண்காணித்து அமைச்சரவைக்கு முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பணிக்கப்பட்டது. இந்நிலையில் மலையக அபிவிருத்திக்காக உருவாக்கப்பட்ட இந்த அதிகார சபை நிச்சயமற்ற நிலையை எதிர்நோக்கியுள்ளது.

**வலுக்கும் எதிர்ப்புகள்**

அரசாங்கத்தின் இந்த செயற்பாட்டை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதிக்கு பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் உடனடி கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது '2018ம் வருட 32ம் இலக்க சட்டத்தின் மூலம் நாம் எமது நல்லாட்சி காலத்தில் போராடி பெற்று உருவாக்கிய, "மலையக அதிகார சபை" என எம்மால் அறியப்படும் "பெருந்தோட்ட பிராந்திய புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை"ஐ மூடிவிட, உங்கள் அரசாங்கத்தால் எடுக்கப்படும் முயற்சியை உடனடியாக கை விடுங்கள்' என்று வலியுறுத்தப்பட்டிருந்தது.



மனோ கணேசன், ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவுக்கு எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது; நுவரெலியா, கொழும்பு அவிசாவளை, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, பதுளை, மொனராகலை, காலி, மாத்தறை மற்றும் குருநாகலை, ஆகிய மாவட்ட பெருந்தோட்ட பிராந்தியங்களில் வாழும் வாழும், மலையக தமிழ் மக்கள் சமூக, பொருளாதார, கலாசார, வளர்ச்சிகளில் வளர்ச்சி குன்றிய பிரிவினர் என்பதை புள்ளி விபரங்கள காட்டுகின்றன. இது 200 வருட சாபம்.

இதற்கு காரணம், இந்த சமூகம் இந்நாட்டின் தேசிய வரம்புக்குள் கொண்டு வரபடாமல் இன ரீதியாக ஒதுக்கி வைக்கபட்டமை ஆகும். இவர்கள் அந்நியர்கள், இவர்கள் தமிழர்கள், இவர்களுக்கு காணி வழங்ககூடாது, வீடு வழங்க கூடாது, தேசிய கல்வி கட்டமைப்புக்குள் கொண்டு வர கூடாது, தேசிய சுகாதார கட்டமைப்புக்குள் கொண்டு வர கூடாது, பிரஜா உரிமை வழங்க கூடாது, என எம்மீது காட்டப்பட்ட, காட்டப்படும் இனவாதம்தான்.

மருதன் ராம்

200 வருட ஒடுக்கு முறையில் இருந்து மெல்ல, மெல்ல மீண்டு வரும் இந்த சமூகத்தின், கல்வி தரும் பாடசாலைகள், 1976ம் ஆண்டிலேயே தேசிய கல்வி கட்டமைப்புக்குள் கொண்டு வரப்பட்டன. கடைசி தொகுதி குடியுரிமையும் 2003ம் ஆண்டிலேயே வழங்கப்பட்டு முழுமை அடைந்தது. ஆகவே தேசிய வளர்ச்சி பாதையில் நாம் தாமதமாகவே நடக்க ஆரம்பித்தோம். இதனால், இந்த சமூகம், பின்தங்கிய சமூகமாக இன்றும் இருக்கிறது.



இந்த இன ஒதுக்கல், கொள்கையை இந்நாட்டில் அனைத்து பெரும்பான்மை கட்சிகளும் முன்னெடுத்தன. இந்த சூழலில், இதை கணக்கில் எடுத்தே 2015ம் ஆண்டு முதல் 2019ம் ஆண்டு வரை பதவியில் இருந்த அன்றைய நல்லாட்சி அரசில், தமிழ் முற்போக்கு கூட்டணியினராகிய நாம் பல்வேறு நல திட்டங்களை முன்னெடுத்தோம்.

இந்த பிரதான தேவையின் பின்புலத்தில், மலையக மக்களின் விசேட குறைதீர் (Affirmative Policy) கொள்கை தேவையின் அடிப்படை யில் உருவாக்க பட்ட நிறுவனமே, மலையக அதிகார சபைஆகும். நீங்கள் இன்று இதை, ஒரு அமைச்சின் அங்கமாக மாற்ற முயல்கிறீர்கள். அமைச்சு என்பதும் அதன் நடவடிக்கைகளும், நாட்டின் ஜனாதிபதியால் தீர்மானிக்கப்படுகின்றன.

நாளை குறிப்பிட்ட அமைச்சு இல்லாமல் போகுமானால், அந்த அமைச்சின் அங்கமும் காணாமல் போய் விடும். ஆனால், அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டு, பாராளு

தொடர்ச்சி 20ஆம் பக்கம்



# விஜயின் வழிகாட்டுதல்: உலகத் தமிழர்களை இணைக்கும் உறவுப் பாலம்

**ஈழத்தமிழர்கள் மீதான இலங்கை அரசின் இன அழிப்பு தொடர்பில் உங்கள் கட்சியின் நிலைப்பாடும் செயற்பாடும் என்ன?**

ஈழதமிழர்கள்மீதானஇலங்கைபேரினவாத அரசினுடைய இன அழிப்பு நடவடிக்கையை அன்றே தமிழக வெற்றிக் கழகத்தினுடைய தலைவர் விஜய் அவர்கள் எதிர்த்தார், அன்றும் எதிர்த்தார், இன்றும் எதிர்க்கிறார், என்றும் எதிர்ப்பார். தமிழின அழிப்பு, மனித தன்மையற்ற செயல்.

உலகத்தில் ஒரு சிங்கம் இன்னொரு சிங்கத்திட்ட சென்று தனக்கான சக உரிமையை கேட்காது. ஒரு யானை இன்னொருயானையிடம் உரிமை கேட்டு போராடாது. ஆனால் இந்த மனிதர்கள் மட்டும் சக மனிதர்களிடம் மனித உரிமை கேட்டுபோராடிக்கொண்டே இருக்கின்றது. வரலாறு நெடுகப் போராடிக் கொண்டே இருக்கின்றது.

அந்த வகையில, தொட்டுவிடும் தூரத்தில் தமிழ்நாடு இருக்கிறது, இந்த பக்கம் தொப்புள் கொடி தேசமாக ஈழம் இருக்கிறது. இரண்டுக்கும் இடையே ஓடக்கூடிய கடலை இரத்தக்கடலாக மாற்றிய 2009 அந்த காலகட்டத்தை மறக்கவே முடியாது. மன்னிக்கவும் முடியாது.

2009 ஆம் ஆண்டு எங்க கட்சி உதயமாகவில்லை. ஆனால் அப்போதே ‘விஜய் மக்கள் இயக்கம்’ என்று ஒரு அமைப்பு உருவாகிமக்கள் பணியில் ஈடுபட தொடங்கியிருந்த காலகட் டம். அப்போதே இந்த கொடிய போரை கண்டித்து, சிங்கள பேரினவாத அரசைக் கண்டித்து, ஈழ தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து, சென்னையில் மாபெரும் ஒரு நாள் உண்ணாவிரதப்போராட்டத்தை நடத்தினார் எங்களுடைய தலைவர் விஜய்.

பின்குறிப்பு: இது ஒரு உண்மையான உண் ணாவிரத போராட்டம்; ஒரு மணி நேர உண்ணாவிரத போலி நாடகம் அல்ல. வாய்ப்பு கிடைக்கின்ற மேடை எல்லாம், பேசுகிற திசை எல்லாம், மாணவர்கள் மத்தியில், மீனவர்கள் மத்தியில், பொதுக்கூட்டமேடையில், தொடர்ச்சியாக ஈழ தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து குரல் கொடுத்துக் கொண்டே இருந்தார் எங்களுடைய தலைவர் விஜய்.

இன்னும் சொல்லப்போனால், நாகப் பட்டணத்தில் அப்போது நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கடுமையான சொற்களைபிரயோகம் செய்தார். இலங்கை அரசின் மீது மிகப்பெரிய தாக்குதலை ஏற்படுத்தக்கூடிய வார்த்தைகளை தெரிவு செய்து, அதை பயன்படுத்து பாவித்து அவர்களின் மீது கண்டனத்தை செலுத்தினார்.

அன்றும் சரி, இன்றும் சரி, என்றும் சரி, குரலற்ற கூட்டமாக இருக்கக்கூடிய இந்த ஈழ தமிழர்களின் குரலாகஒழிப்பதற்காகத்தான் நாங்கள் களத்திற்கே வந்திருக்கிறோம். அந்த பணியில் அவர்களோடு சேர்த்து கரம்பற்றி நிற்கிறோம். அவர்களின் துக்கத்தில் நாங்களும் பங்கெடுக்கிறோம். அவர்களின் போராட்டத்திற்கு நாங்களும் வலிமை சேர்க்கிறோம்.

**புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழ் மக்களுக்கும் தமிழகத்துக்குமான உறவுகள் உங்கள் ஆட்சியில் பலமடையுமா?**

புலம்பெயர்ந்து வாழக்கூடிய தமிழர்களுக்கும் ஈழத்து தமிழர்களுக்கும் இந்திய திருநாட்டின் தமிழ்நாட்டு தமிழர்களுக்குமானஉறவு என்பது மிக மிக முக்கியமானது.

**இலக்கு மின்னிதழுக்கு தமிழக வெற்றிக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் திரு-ராஜ் மோகன் ஆறுமுகம் அவர்கள் இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலை இங்கே தருகின்றோம்.**



ஏற்கனவே நான் குறிப்பிட்டதை போல, இன்று உலகம் முழுக்க தமிழர்கள் பல்கி பெருகி பரவி இருக்கிறோம். ஆனால்ஒன்றாக இருக்கிறோமா? என்ற கேள்விக்கு என்னால் உறுதியாக ‘ஆமாம்’ என்று பதில் சொல்ல முடியவில்லை. நமக்குள்எத்தனையோ பிரிவினைகள் இருந்தாலும், அத்தனை பிரிவினையும் தாண்டி தமிழர்களாக ஒன்றிணைய வேண்டிய ஒருமிகப்பெரிய பொறுப்பு கடமை நம்ம அத்தனை பேருக்குமே இருக்கிறது.

சிங்கப்பூர், மலேசியா, கடாரம், ஜப்பான், இந்தோனேசியா போன்ற இந்த கீழைத்தேய நாடுகள் எல்லாம் ஒரு பக்கம். அமெரிக்கா, ஐரோப்பா, லண்டன் இதை போன்ற மேலை நாடுகள் இன்னொரு பக்கம். வளைகுடா நாட்டில் இருக்கக்கூடியதமிழர்கள் இன்னொரு பக்கம். இதை தவிர, நார்வேஜியன் நாடுகளில் இருக்கக் கூடிய தமிழர்கள் இன்னொரு பக்கம். இப்படி மண்டலம் மண்டலமாக, கண்டம் கண்டமாக பிரிந்திருக்கிறோம்.

ஆனால், எப்போது எங்கு பிரிந்திருந்தாலும் கூட, அந்தந்த ஊர்களில் ஒரு தமிழ்ச் சங்கம் கட்டி எழுப்பி, ஆலய திருப்பணிசெய்து, இலக்கிய மலர்கள் வெளியிட்டு, ஊடகங்களில் இடம் தரவில்லை என்றால் இடம் தருவதற்காகவே தனித்தனி ஊடகங்களை உருவாக்கி, அந்த ஊடகங்களின் வழியாக நல்ல நல்ல சிந்தனைகளை நாம் கருவாக்கி, உருவாக்கி, அதையெல்லாம் மக்களிடம் கொண்டு போய் சேர்த்து, இந்த உலக தமிழர்களை ஒன்றிணைக்கக்கூடிய உறவு பாலமாக இந்தஊடகங்கள் உதவுகின்றன.

அந்த வகையில், நாங்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வந்த பிறகு, அந்த இணைப்பு பணியை, அந்த உறவு பாலங்களை, அந்தஇணைப்பு சங்கிலியை இன்னும் ஆழமாகவும் இன்னும் உயரமாகவும் நாம் ஏற்படுத்த வேண்டும். அது அத்தியாவசியம், அதுகாலத்தினுடைய தேவை. அதற்கான விஷயங்களை நாங்கள் முன்னெடுப்போம்.

கலைத்துறையின் ஊடாக உலகம் முழுக்க இருக்கக்கூடிய தமிழர்களை ஏற்கனவே கலைத்துறையின் ஊடாக இணைத்த ஒருபெருமையும் எங்க தலைவர் விஜய்க்கு உண்டு. இன்று எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்களோ, அங்கெல்லாம் அந்ததிரையரங்குகளில், அவர்கள் வாழ்க்கையினுடைய வலிகளை மறப்பதற் காக, காயங்களுக்கு விருந்தாக்கக்கூடிய எத்தனையோதிரைப்படங்களின் வெளியீடுகளின் போது, அந்த உலக தமிழர்கள் எல்லாம் அந்த திரைப் படங் களை வந்து பார்த்து, அந்த வகையான வரலாற்றை எல்லாம் நாங்கள் வந்து ஊடகங்களின் ஊடாக அறிய முடிகின்றது. அது கலைத்துறை, அதுகலைப்பணி.

இப்போது அரசியல் துறையில் நுழைந்திருக்கிறோம். இது சமூக பணி, இது மக்கள் பணி. இதன் மூலமாகவும் இந்த உலகதமிழர்களை இணைப்பதற்கான வேலையை நாங்கள் முன்னெடுப்போம். தமிழா தமிழா ஒன்றுபடு தருணம் இதுதான். ஒன்றுபடுஎன்ற புகழ்பூத்த வாசகங்களுக்கு ஏற்ப, நானும் இந்த சிறியவனும் வெற்றி தலைவரினுடைய வெற்றி கழகத்தினுடைய பாதையில் என்று சொல்கிறேன்.

தமிழர்களே, தமிழர்களே, ஒன்றாகுங்கள். நன்றாகுங்கள். நாம் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு ஒற்றுமையோடு சேர்ந்து, சர்வதேச மன்றங்களில் நம் இனத்திற்கு நேர்ந்த அந்த கொடுமைகள் எல்லாம், நம் இனத்திற்கு நேர்ந்த அந்த இனவழிப்பு நடவடிக்கைக்கு எல்லாம், சம் பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வாங்கி கொடுத்து, மக்கள் மன்றத்தில் அவர் தம் உண்மை முகங்களை தோலுரித்து காட்ட வேண்டியதற்கான முயற்சிகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கக்கூடிய மக்களுக்கு வலுசேர்க்க வேண்டும். அவர் தம் கரம் பற்றி நிற்க வேண்டும்.

இனிவரும் காலமாவது, தமிழன் என்ற ஒரு இனம் உண்டு, தனியே அதற்கு ஒரு குணம் உண்டு என்ற வார்த்தைகளுக்கு ஏற்ப, நம்முடைய பெருமையை, நம்முடைய அருமையை இந்த உலக அரங்கிற்கு புரிய வைப்போம். அதற்கான முயற்சிகளில் வெற்றிகழகமும் முன்னேறி சென்று கொண்டிருக்கிறது. நீங்களும் வாருங்கள். ஒன்றாகி, ஒரே திசையில் பயணித்து, இலக்கைஅடைவோம். எதிரிகளை வீழ்த்துவோம்.

**தமிழகத்தில் தஞ்சமடைந்து வாழும் ஈழத்தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வு குறித்த உங்கள் கருத்து என்ன?**

தமிழ்நாட்டில் தஞ்சமடைந்திருக்கக்கூடிய அப்பாவி அகதிகளாக, இந்த மண்ணை தொட்டுருக்கக்கூடிய அந்த மக்கள், கிட்டத்தட்ட ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலையில் இருப்பதை போல, வசதிகள் குறைந்த, வாய்ப்புகள் குறைந்த, மனிதஉரிமைகள், அடிப்படை உரிமைகள் மறுக்கப்படக்கூடிய ஒருசூழ்நிலையில் இருப்பதாக

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## விஜயின் வழி... தொடர்ச்சி ...

அறிய நேர்கிற பொழுது, எங்கள்நெஞ்சமெல்லாம் கனக்கிறது.

அவர்களினுடைய சூழ்நிலையை மாற்றிடுவேன், அவர்களுக்கு நல்லது செய்துவிடுவோம் என்று வாக்குறுதி கொடுத்துஆட்சியை பிடித்தவர்கள், அந்த ஆட்சி அதிகாரத்திற்கு வந்த பிறகு காட்சியை மாற்றுவார்கள் என்று பார்த்தால் இல்லை. அவர்களே மாறி போனார்கள். அவர்களுக்கு நயவஞ்சகம் செய்து, துரோகம் செய்துவிட்டார்கள். ஒரு மாற்றாந் தாய் மனப்பான்மையை போல அந்த மக்களை அணுகிக் கொண்டிருக்கிறார்கள்.

எத்தனையோ எல்லைக்கோடுகளில், எத்தனையோ நாடுகளிலிருந்து தஞ்சமடைந்த மக்கள், உலகமெங்கும் புலம்பெயர்ந்தஅந்த மக்கள், மற்ற நாடுகளில் எல்லாம், மேலை நாடுகளில், கீழை தேய நாடுகளில், முதல்தர நாடுகளில் எல்லாம், தஞ்சமடைந்த அகதியாக அந்த மண்ணை தொட்ட அருமை தமிழர்கள், ஐந்தே ஆண்டுகளில் அந்த நாட்டினுடைய பிரஜையாகமாறி, குடிமக்களாக மாறி, இரண்டு தலைமுறைகளில் அந்த நாட்டினுடைய பொருளாதாரத்திற்கு வளம் சேர்க்கின்ற வகையில் மாபெரும் தொழிலதிபர்களாக மாறி, அவர்தம் பிள்ளைகளும் அவர்தம் பெண்களும் பாராளு மன்றங்களில் பேசக்கூடியபாராளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர் பெருமக்களாக வருகின்ற அழகை எல்லாம் பார்க்கிற பொழுது, எங்கள் நெஞ்சம்வாடுகிறது, வேகிறது.

ஏன் இந்த மண்ணில் மட்டும் அப்படி ஒரு சூழல் இல்லாமல் இருக்கிறது என்ற ஒரு கேள்வி எழுகிறது. நிச்சயமாக, வருங்காலங்களில், அவருக்கும் சேர்த்து, அவர்களின் உரிமைகளுக்கும் சேர்த்து, நல்லது நடக்க வேண்டும், நலம் நடக்கவேண்டும். நல்லது நடப்பதற்காக, நல்ல விஷயங்கள் நடப்பதற்காக, நல்லவர்கள் கையில் ஆட்சி மாற்றம் நிகழும் என்று நான்நம்புகிறேன்.

அப்படி நிகழ்கின்ற பொழுது, ஒரு சிறப்பு குழுவை ஏற்படுத்தி, அவர்தம் நலம் சார்ந்து என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதை போர்கால அடிப்படையில் முன்னுரிமை கொடுக்கப்பட்டு, அவர்களினுடைய வாழ்க்கையிலும் ஒருவெளிச்சம் வரும் என்று நானும் உங்களைப் போல காத்திருக்கிறேன். அது நிச்சயம் ஒரு நாள் நடக்கும். பொறுத்திருந்து பாருங்கள்.

### இந்திய மீனவர்களால் பாதிக்கப்படும் ஈழத் தமிழ் மீனவர்களின் பிரச்சனைகளை தீர்க்க திட்டமுண்டா?

மீனவர் பிரச்சனை என்பது நெடுநாள் பிரச்சனை. இந்த மீனவர்களை ‘மீன் வேட்டுவர்கள்’ என்று சங்க இலக்கியம் சொல்கிறது. சொல்லப்போனா, ஆதி தமிழர்கள் முதன்முதலில் செய்த தொழில்களில் இந்த மீனவர் தொழிலும் ஒன்று. நம் சமூகத்தினுடையபழங்குடி மக்களாக, தொல்குடி மக்களாக மீனவர்கள் இருக்கிறார்கள்.

இந்திய மீனவர்களாக, தமிழ் மீனவர்களாக, தமிழ்நாட்டு மீனவர்களாக இருந்தாலும் சரி, இலங்கையிலிருந்து மீன்பிடிக்கக்கூடிய மீனவர்களாக இருந்தாலும் சரி, ஈழ தமிழ் மீனவர்களாக இருந்தாலும் சரி, மீனவர்கள் என்பது இந்த மண்ணினுடைய பூர்வ குடி மக்கள். ஆன்மீகத்தில மீனவர் சமூகத்தில இருந்து வந்து ஆன்மீக பணி செய்தவர்கள்இருக்கிறார்கள். இலக்கிய பணி செய்த மீனவர்கள் இருக்கிறார்கள்.

விவசாயிகளை என்ன சொல்வோம்? தங்கள் உயிரை பணையம் வைத்து உணவு பொருள் தயாரிக்கக்கூடிய விவசாயிகளைகடவுளுக்கு நிகராக சொல்வோம். அப்படி பார்த்தா, மீனவர்கள் வந்து ‘கடல் விவசாயிகள்’னு நான் சொல்லுவேன். ‘திரைக்கடல் விவசாயிகள்’னு சொல்லுவேன். உண்மையிலேயே உயிரை பணயம் வைத்து, அவர்கள் இந்த உலகத்தினுடைய பசியைநீக்குபவர்கள்.

ஆனால் அதுல என்ன ஒரு சிக்கல்ன்னா, தரையில் நாம் எல்லைகளை வகுப்பதை போல, திரையில், அதாவது கடல்ல, எல்லைகளை நம்ம துல்லியமாக கணக்கீடு செய்ய முடியாது. ஒரு இடத்தில நட்ட இடத்தில் அப்படியே நெல் வளரும், புல்வளரும், பனை வளரும், தினை வளரும். நட்டை இடத்துல அப்படியே வளரும். அதைதான் தொல்காப்பியர் கூட ‘ஓரறிவு’ன்னு சொல்லுவார்; நட்ட இடத்தில அப்படியே இருக்கும், நகராது, வளரும்.

ஆனா, கடல் உணவாக இருக்கக்கூடிய அந்த மீன் வளம் இருக்கு பாருங்க, அது அப்படி இல்ல. கடலுக்குள்ள வெளியேதெரியாமல் சீறிப் பாய்க்கிற ஆறுகள் உண்டு, நீரோட்டம் உண்டு. கடலுக்குள்ளார எப்போது எந்த திசை காற்று மாறும் சொல்லமுடியாது. அப்ப, எந்த இடத்தில் மீன் வளம் இருக்கிறது என்று தேடி பார்த்து, பயணம் செய்துதான் இந்த மீன் வளத்தை வந்து, அந்த மீனவர்கள் வலைபிடித்து, தங்களுடைய தரைக்கு திரும்ப கொண்டு வர முடியும்.

இப்படிப்பட்ட சிக்கல்ல இங்க மட்டும் கிடையாது; சர்வதேச அளவிலேயே இந்த மீனவர்கள் பிரச்சனை, எல்லை பிரச்சனைஎன்பது இருக்கிறது.

ஆனால் நம்முடைய கேள்வி என்னன்னா, வேற எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு, தமிழ்நாட்டு மீனவர்களாக இருந்தாலும்சரி, தமிழ் ஈழத்தின் பகுதியில் இருந்து வரக்கூடிய அந்த மீனவர்களாக இருந்தாலும் சரி, இந்த சிங்கள பௌத்த கடற்படை கடுமையான ஆயுதங்களை பிரயோகம் செய்கின்றனர்.

ஒரு நாட்டினுடைய பிரஜையை, இன்னொரு நாட்டை சார்ந்த இராணுவமோ, அவர்களின் கப்பல்படையோ, துப்பாக்கிகொண்டு சுட்டுவிட்டால், அது போர் மூலம் .இதான் உலக நியதி. ஆனால், இதுவரை 600க்கும் மேற்பட்ட தமிழ்நாட்டுமீனவர்களை இலங்கை கடற்படை சுட்டு கொன்றுள்ளனர். கேட்பார் இல்லை. இது வரைக்கும் கணக்கில் அடங்காத தமிழ்மொழி பேசக்கூடிய மீனவர்கள் மீது அந்த கடற்படை கடுமையான வன்முறையை பிரயோகம் செய்திருக்கின்றது, கேட்பார்இல்லை.

அதற்கு பதிலாக, மலினமான, பிரித்து ஆளக்கூடிய அந்த பிரிவினை சூழ்ச்சியை செய்து, தமிழ்நாட்டு மீனவர்களையும், ஈழத்தமிழ் மீனவர்களையும், இலங்கை மீனவர்களையும் பிரித்து ஆள நினைக்கிறது இத சிங்கள பேரியவாத அரசு. அதுஏற்புடையது அல்ல.

வரும் காலங்கள்ல, தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, இவர்கள் பிரச்சனைக்கான, இந்த சிக்கலுக்கான தீர்வுகளைகண்டடைந்து, இந்த மீனவர் சமூகம், எந்த நாட்டில் இருந்து வரக்கூடிய மீனவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் சொந்தநாட்டிற்கு, தாய் நாட்டிற்கு, பத்திரமாக உயிரோடு, அவரிடம் உறவுகளுக்கு சென்று திரும்ப வேண்டிய ஒரு சூழ்நிலையைஉறுதி செய்ய வேண்டியது அனைவரினுடைய கடமை.

அதுதான் எங்களுடைய தலையாய பணியாக நாங்கள் வைத்திருக்கிறோம். இந்த சிக்கலை தொழில்நுட்ப உதவி கொண்டுநாங்கள் தீர்ப்பதற்கான முன்னேற்படைகளை செய்வோம் என்று நான் நம்புறேன்.

### நீங்கள் ஆட்சிக்கு வந்தால் இலங்கை அரசு மீது அழுத்தம் பிரயோகிப்பீர்களா?

தமிழ்நாட்டின் திசையெல்லாம் பயணம் செய்து கொண்டிருக்கிறோம். மூலை முடுக்க எல்லாம் போய், மக்கள் சந்திப்பு செய்து கொண்டிருக்கிறோம். வெற்றி தலைவர் விஜய் அவர்களை கூட்டிக்கொண்டு, மக்களை அவர் நேரில் பார்ப்பதை, நாங்களும்நேரில் சென்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் மக்களின் நம்பிக்கையை வென்று ஓவர் கான்ஃபிடென்ஸ்லஇல்லைங்க. நான் நடைமுறையை சொல்றேன், கள எதார்த்தத்தை சொல்றேன்.

அந்த வேர்வை வாசத்தோடு, எங்கள் கைகளை பற்றி, மக்கள் ஆனந்த கண்ணீர் வடித்து, அவர்தம் உள்ளத்தில் இருக்கக்கூடியஎல்லா இனத்தையும் காட்டுகிறார்களே, அதை அவரோடு சென்று பார்ப்பவர்களை நானும் ஒருவனாக இருப்பதால் நான்சொல்கிறேன். நிச்சயமாக, மக்களின் பேராதரவோடு, இன்னும் ஆதரவு அதிகரித்து, இன்று ஒவ்வொரு ஊரிலும் கொடியேற்றுகிறோம். ஒரு நாள் சென்சார்ஜ் கோட்டையிலும் கொடியேற்ற போகிறோம். தொட்டுவிடும் தூரத்தில தான் அதுகாத்திருக்கு.

ஆட்சி அதிகாரத்திற்கு வந்த பிறகு, ஈழ தமிழர்களின் நலன் சார்ந்து, என்னவெல்லாம் செய்தால், அவர்கள் சந்தித்த அந்தமாபெரும் துயரத் திற்கு, அந்த காயத்திற்கு மருந்தாகுமோ, அந்த தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கான வேலைதிட்டங்கள், செயல் திட்டங்கள், தேர்தல் அறிக்கை எனு சொல்லப்படுற அந்த மேனிபெஸ்டோல வைக்க வேண்டிய பல்வேறு விஷயங்களை குறித்து, ஒரு குழு ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறது. தகுந்த நேரத்தில், சரியான நேரத்தில், சரியானவிடயங்களை குறித்து அறிவிப்புகளை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

நிச்சயமாக, நான் வந்து தமிழ் மொழி பேசக்கூடிய மனிதனாக மட்டும் கிடையாது. மனிதனாக பிறந்த ஒவ்வொருவருமேகண்டிக்க வேண்டிய ஒரு விஷயம்னா, அது நிச்சயமாக இலங்கையில் நடைபெற்ற அந்த மாபெரும் துன்பியல் சம்பவம், தாங்கஅந்த துயர சம்பவம், தாங்க யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அப்பாவி குட்டி குட்டி குழந்தைகளை கூட, வானத்தில்பறக்கிற விமானத்தில் இருந்து உணவு போட்டலும் விழுமா, மருந்து போட்டலும் விடுமா என்று எதிர்பார்த்தவர்கள் தலையில்கிளஸ்டர் குண்டுகளை போட்டு, செல் குண்டுகளை போட்டு, கொடூரமாக கொலை செய்த அந்த அந்த சிங்கள அரசினுடைய, அந்த இலங்கை அரசினுடைய அந்த கொலை குற்றத்தை மன்னிக்கவும் முடியாது, மறக்கவும் முடியாது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆவணம் 2-ன் உள்ளடக்கம், தர்க்கரீதியான பத்திகள் மற்றும் சரியான வாக்கிய வடிவமைப்புடன்தமிழில் வழங்கப்பட்டுள்ளது. பேச்சின் ஒட்டுமொத்த ஓட்டத்தைப் பாதுகாக்கும் வகையில், ஒவ்வொரு பத்தியும் ஒரு குறிப்பிட்டதலைப்பு அல்லது கருத்தை மையமாகக் கொண்டுள்ளது.

அந்த பதுங்கு குழியில் ஒழிந்திருந்த எங்களுடைய செஞ்சோலை செல்லங்கள் எல்லாருமே அந்த பதுங்கு குழியில் அப்படியே செத்து போய், அந்த பதுங்கு குடி எல்லாம் சபக்குடிகளாக மாறிப்போனதை மறக்கவே முடியாது.


ஏன், இப்போது செம்மணி அந்த கிரேவியார்டு வெளியே வருகிற பொழுது, ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப்பட்ட நிலையில்அங்கே கிடைத்த அந்த எலும்புக்கூட்டைப் பார்க்கிற பொழுது, அங்கிருந்து அந்த குட்டி குழந்தைகளின் எலும்பு கூண்டுகள்கிடைத்திருக்கிறது. அதையெல்லாம் அறிய நேறுகிற பொழுது எங்கள் நெஞ்சம் பதறுகிறது.

நிச்சயம் இதெல்லாம் ஒரு நாள் மாறும். ஆட்சி அதிகாரத்தில் ஒரு மாற்றம் வருகிற பொழுது, சர்வதேச அளவில் தமிழர் தமிழர்தம் வாழ்வில் ஒரு மாபெரும் மாற்றம் வரும் என்று நானும் நம்புகிறேன்.

பிறந்து சிறந்த மொழிகளின் மத்தியில் சிறந்தே பிறந்த தமிழுக்கு வணக்கம். இலக்கு ஊடக நேயர் நெஞ்சங்களுக்குவணக்கம். உலக தமிழர்களுக்கு தமிழ் வணக்கம். தமிழக வெற்றி கழகத்தினுடைய துணைப்பூது செயலாளர், உங்கள்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# அமெரிக்காவின் வெற்றி - தோல்வியை தீர்மானிக்கப்போகும் ஒன்றுகூடல்



வேல்ஸ்ஸில் இருந்து **அருஸ்**

உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான அமெரிக்க ஜெனரல்கள் மற்றும் அட்மிரல் களை அடுத்த வாரம் வேர்ஜீனியாவின் குவாண்டிகோவில் உள்ள ஒரு மரைன் கார்ப்ஸ் தளத்தில் கூடுமாறு அமெரிக்காவின் பாதுகாப்புத் தலைமையகமான பென்டகனின் தலைவர் பீட் ஹெக்ஸெத் இந்த வாரம் உத்தரவிட்டுள்ளார். இந்த திட்டமிடப்படாத அவசர நடைவடிக்கை அமெரிக்க படைகளின் உயர்மட்ட அணிகளில் பதட்டத்தைத் தூண்டியுள்ளது.இந்த நிகழ்வு உலகளாவிய இராணுவ சமநிலையில் ஒரு திருப்புமுனையைக் குறிக்கின்றது.



போர் செயலாளர் அடுத்த வார தொடக்கத்தில் தனது மூத்த இராணுவத் தலைவர்களுக்கு உரையாற்றுவார் என்று தலைமை செய்தித் தொடர்பாளர் சீன் பார்னெல் வியாழக்கிழமை(25) தெரிவித்துள்ளார். எனினும் இந்த ஒன்றுகூடல் தொடர்பில் எந்த விவரங்களையும் அவர் வெளியிடவில்லை.

கடந்த மாதம் பென்டகனை “போர் துறை” என்று மறுபெயரிட்ட ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், பாதுகாப்பு செயலாளரின் பெயரையும் போர் செயலாளர் என மாற்றியிருந்தார். அதாவது அமெரிக்கா ஒரு போருக்குள் உள்ளது என்பது தான் அதன் அர்த்தம்.

இது ஒரு நட்பு ஒன்று கூடல், ஜெனரல்களும் உயர் அதிகாரிகளும் இப்போது போர் செயலாளருடன் கலந்துரையாட அமெரிக்காவிற்கு வர விரும்புவது மிகவும் நல்லது. அவர்கள் புதிய ஆயுதங்கள் மற்றும் உபகரண தளங்களை பார்வையிடப் போகிறார்கள் என அமெரிக்க அதிபர் இது தொடர்பில் தெரிவித்துள்ளார்.



இருப்பினும், இந்த உத்தரவு உலகம் முழுவதும் உள்ள அமெரிக்க படை அதிகாரிகளின் கால அட்டவணைகளை சீர்குலைத்து, களத்தில் செயலில் உள்ள தளபதிகள் திடீர் பயணத்தை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளது. பாதுகாப்பான மின்னஞ்சல்கள், தொலைபேசி அழைப்புகள் மற்றும் வீடியோ இணைப்புகள் மூலம் தொடர்பு கொண்டிருக்கலாம் என ஒரு அதிகாரி பொலிட்டிகோ ஊடகத்திடம் தெரிவித்துள்ளார்.



பென்டகனின் தலைமையை ஹெக்செத் தீவிரமாக மாற்றியமைத்து வரும் நிலையில், அவர் பதவியேற்றதிலிருந்து, கூட்டுத் தலைவர்களின் தலைவர் ஜெனரல் சார்லஸ் கியூ. பிரவுன் ஜூனியர் மற்றும் கடற்படைத் தலைவர் அட்மிரல் லிசா ஃபிரான்செட்டி உட்பட பல மூத்த அதிகாரிகளை பணிநீக்கம் செய்துள்ளார். அதே நேரத்தில் நான்கு நட்சத்திர ஜெனரல்கள் மற்றும் அட்மிரல்களில் 20% குறைப்புக்கு உத்தரவிட்டுள்ளார். அதிக ஜெனரல்கள் மற்றும் அட்மிரல்கள் வெற்றிக்கு வழி வகுக்காது என்று அவர் பலமுறை தெரிவித்துள்ளார்.




கூட்டுத் தலைவர்களும் போர்த் தளபதிகளும் பாரம்பரியமாக வாஷிங்டனில் வருடத்திற்கு இரண்டு முறை சந்திக்கும் அதே வேளையில், மோதல் களங்களில் உள்ள கட்டளை அதிகாரிகள் உட்பட நூற்றுக்கணக்கான அதிகாரிகளை அழைப்பது முன்பு எப்போதும் நடக்காதது என இராணுவ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பென்டகன் சமீபத்தில் இரண்டு முக்கிய கொள்கை மதிப்பாய்வுகளை செய்துள்ளது, அதில் சீனாவிலிருந்துவரும் அச்சுறுத்தல்களில் இருந்தான உள்நாட்டுப் பாதுகாப்பு, மேற்கு அரைக் கோளத்திற்கான *(Western Hemisphere)* இராணுவ முன்னுரிமை மாற்றும் ஒரு புதிய தேசிய பாதுகாப்பு உத்தி என்பன அடங்கும்.

இந்த மாத ஆரம்பத்தில் இடம்பெற்ற சீனாவின் வெற்றிதின அணிவகுப்பு வெறும் சடங்கு காட்சியாக இருக்கவில்லை. அது பல தளங்களில் அமெரிக்காவை விட உயர்வாக இல்லாவிட்டாலும், தொழில்நுட்ப சமநிலையின் அறிவிப்பாகும்.




சீனாவின் அணிவகுப்பு 17 க்கும் மேற்பட்ட புதிய ஆயுதங்களை வெளிப்படுத்தியிருந்தது, அவற்றில் பல செயற்கை நுண்ணறிவு, ஹைப்பர்சோனிக்ஸ் மற்றும் சுயமாக இயங்கும் தளங்களை *(Autonomous platforms)* ஒருங்கிணைக்கின்றன. ஃபுஜியன் விமானந் தாங்கிக் கப்பலில் இருந்து மூன்று மேம்பட்ட விமானங்களை EMALS வெற்றிகரமாக ஏவியது மற்றும் ஆறாவது தலைமுறை போர் விமானங்களின் படங்கள் ஒரு யதார்த்தத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன: போட்டியின்றி அமெரிக்க இராணுவ ஆதிக்கத்தின் சகாப்தம் முடிந்துவிட்டது என்பதே அது. எனவே 800 க்கும் மேற்பட்ட ஜெனரல்கள் மற்றும் அட்மிரல்களுடன் போர் செயலாளர் பீட் ஹெக்செத்தின் அவசர சந்திப்பு ஒரு அதிகாரத்துவ பயிற்சி அல்ல, அது ஒரு மூலோபாய எச்சரிக்கை மணி.

ஃபுஜியனின் (Fujian)EMALS பயன்பாடு என்பது ஒரு காலத்தில் அமெரிக்க கடற்படைக்கு மட்டுமே பிரத்யேகமாக இருந்த போர் தொழில்நுட்பத்தைதற்போது சீனாஅமெரிக்காவை விட விரைவாக பெற்றுவிட்டது என்பதாகும். சீனாவின் ஆயுதங்கள் அதி வேகமானதாகவும், அதிக சுமைகளை காவிச் செல்லவல்லதாகவும் உள்ளன. மேலும் ஆறாவது தலைமுறை போர் விமானங்கள், வால் இல்லாத ரடார்களை ஏமாற்றும் ட்ரோன் கட்டளை ஒருங்கிணைப்பு மற்றும்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# பாலஸ்தீன தேசம் உருவாக அங்கீகாரம் மட்டும் போதாது: அடுத்து என்ன?

தமிழில்: **ஜெயந்திரன்**

பல தசாப்தங்களுக்குப் பின், முதற் தடவையாக, பாரம்பரியமாக இஸ்ரேலுடன் ஆழமான உறவைப் பேணி வந்த நாடுகள், தங்கள் முடிவில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. கடந்த ஞாயிற்றுக் கிழமை, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, கனடா, போர்த்துக்கல் ஆகிய நான்கு நாடுகள் பாலஸ்தீன அரசை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்திருக்கின்றன. இவ்வாறு ஐக்கிய நாடுகள் அமைப்பின் 193 அங்கத்துவ நாடுகளில் பாலஸ்தீன அரசை ஏற்கனவே அங்கீகரித்த 147 நாடுகளுடன், தங்களையும் இந்த நாடுகள் இணைத்திருக்கின்றன. இது உண்மையில் ஒரு முக்கிய திருப்புமுனையாகும். பல வருடங்களாக கண்ணை மூடிக்கொண்டு இஸ்ரேலை ஆதரித்து வந்த நாடுகள், பன்னாட்டுச் சமூகத்தின் பெரும்பான்மை நாடுகளுடன் தங்களை இணைத்திருக்கின்றன.

இந்த நடவடிக்கைக்கு இஸ்ரேல் உடனடியாகவே பதிலளித்திருந்தது. “பாலஸ்தீன அரசு ஒரு போதுமே உருவாக்கப்படமாட்டாது” என்று பிரதம மந்திரி நெத்தனியாகு சூளுரைத்தார். “ஒக்ரோபர் 7ம் திகதி மேற்கொள்ளப்பட்ட மிக மோசமான படுகொலைக்குப் பின்னர், பாலஸ்தீன அரசை அங்கீகரித்த தலைவர்களுக்கு நான் ஒரு தெளிவான செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். பயங்கரவாதத்துக்கு நீங்கள் ஒரு பெரிய பரிசைக் கொடுக்கிறீர்கள். உங்களுக்கு இன்னொரு செய்தியையும் சொல்ல விரும்புகிறேன்.

“அது நடக்கவே நடக்காது. ஜோர்தானுக்கு மேற்குத் திசையில், பாலஸ்தீன அரசு ஒரு போதுமே உருவாகாது.”

அவரது கூட்டணியைச் சார்ந்த ஏனைய அங்கத்தவர்களும் அவ்வாறான செய்திகளை வெளியிட்டார்கள். தேசிய பாதுகாப்பு அமைச்சரான இற்றாமார் பென் க்வீர் மற்றும் நிதி அமைச்சர், பெசாலெல் ஸ்மோற்றிச் உள்ளிட்டோர் மேற்குக் கரையையும் இஸ்ரேலுடன் தாங்கள் இணைக்கப் போவதாகக் கூறியிருக்கிறார்கள்.

ஆனால் பெரும்பாலான பாலஸ்தீனர்களைப் பொறுத்தவரையில், மேற்கத்தைய நாடுகளின் தலைநகரங்களில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம், சரியான திசையை நோக்கிய ஒரு முக்கிய படி எனக் கருதுகிறார்கள்.

பாலஸ்தீன அரசை இந்த நாடுகள் தற்போது அங்கீகரிக்க முடிவு செய்ததற்கான காரணத்தையும் அத்துடன், அந்த முடிவு ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தையும் அறிந்துகொள்வதற்காக பாலஸ்தீனத்தின் மேனாள் ஐக்கிய இராச்சியம், மற்றும் கனடாவுக்கான தூதுவராகப் பணியாற்றியவரும், இந்நாள் இத்தாலிக்கான தூதுவராகப் பணியாற்றிக்கொண்டிருப்பவருமான மோனா அபுவாமாறாவுடனும் *(Mona Abuamara)* ஐக்கிய இராச்சியத்துக்கான மேனாள் தூதுவரான மனுவேல் ஹஸாசியனுடன் *(Manuel Hasasian)* ஆர்ரி ஊடகம் செவ்விகளை மேற்கொண்டது.




**ஆர்ரி: பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பது என்ற முடிவை பிரதம மந்திரி எடுத்ததற்கான காரணம் என்ன?**

**மனுவேல் ஹஸாசியன்:** பல மில்லியன் கணக்கான பிரித்தானிய மக்கள் பாலஸ்தீன மக்களின் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்ற கருத்துக்கு ஆதரவாக இருப்பதால், பிரதம மந்திரிக்கு இதைவிட வேறு எந்தத் தெரிவும் இல்லை. தற்போது தொழிற்கட்சி ஆட்சியில் இருப்பதால், பாலஸ்தீனப் பிரச்சினை தொடர்பாக ஒரு முக்கிய முடிவை எடுக்க கட்சி விரும்பியது. அதுமட்டுமன்றி, பிரெஞ்சு அதிபர் மக்ரோன் தலைமையில், பல ஐரோப்பிய நாடுகள் இந்த முடிவை ஏற்கனவே எடுத்திருந்ததன் காரணமாக இவ்வாறான ஒரு நடவடிக்கையை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு அழுத்தம் கொடுத்தார்கள்.

உண்மையில் இந்த அங்கீகாரம் எப்போதோ கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். பாலஸ்தீனத்தில் யூத மக்கள் குடியேறுவதற்கு வழிவகுத்த பல்வோர் பிரகடனத்திலிருந்து *(Balfour Declaration)* பாலஸ்தீன மக்கள் சந்தித்து வரும் அநீதிகளைப் போக்குவதற்கு ஐக்கிய இராச்சியம் காலம் கடத்திக்கொண்டு இருந்தது. பாலஸ்தீன அரசு தேவை என்பதை உணர்ந்துகொள்ள அவர்களுக்கு 108 வருடங்கள் தேவைப்பட்டிருக்கின்றன.

போர்நிறுத்த நிபந்தனைகளைக் கடைப்பிடிக்கவும், காஸாவிலிருந்து படைகளை விலக்கிக் கொள்ளவும், காஸாத்துண்டுக்குள் மனித நேய உதவிகளை அனுமதிக்கவும் இஸ்ரேல் தவறியதன் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் தற்போதைக்கு இந்த ஒரு முடிவு அடையாள ரீதியாகத் தான் இருக்கிறது. காரணம் என்னவென்றால் அமெரிக்காவின் ஆதரவைக் கொண்டிருக்கும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் தான் தற்போதும் இந்தப் பிரதேசம் இருக்கிறது.

**மோனா அபுவாமாறா:** சில காலங்களுக்கு முன்பே இந்த முடிவை கனடா எடுத்திருந்தது. ஆனால் பன்னாட்டு மற்றும் உள்நாட்டுக் காரணங்களினால் அந்த முடிவை அறிவிப்பதை கனடா நிறுத்தி வைத்திருந்தது. முன்னர் பல முக்கிய வெளிநாட்டுக் கொள்கை தொடர்பான விடயங்களில் கனடா, அமெரிக்காவுடன் இணைந்து போய்க்கொண்டிருந்தது. சீயோனிசக் குழுக்கள் மற்றும் இஸ்ரேலுக்கு ஆதரவாகக் கனடாவில் இருக்கும் அமைப்புகள் முன்னேற முடியாதவாறு கனடா அரசுக்கு அழுத்தம் கொடுத்துக்கொண்டிருந்தன.

இப்போது நிலைமைகள் முற்றிலும் மாறிவிட்டன. பன்னாட்டு ரீதியாகப் பார்க்கும் போது, அமெரிக்க கனேடிய உறவுகள் சீர்குலைந்ததன் காரணத்தினால் ஒழுங்குவிதிகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்ற ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்து, தமக்கெனச் சுதந்திரமான முடிவை எடுக்க கனடா தள்ளப்பட்டது. உள்நாட்டளவில் கனேடிய அரசு செயற்படக்கூடிய விதத்தில் மாற்றங்கள் கணிசமான அளவு ஏற்பட்டிருக்கின்றன. இரு தேசக் கொள்கை தொடர்பாக வெறும் வார்த்தைகளைக் கடந்து, செயற்பாட்டு ரீதியாக கனடா அர்ப்பணிப்புடன் இருக்கிறது என்பதை அதன் பாலஸ்தீன அங்கீகாரம் வெளிப்படுத்துகின்றது.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

**பாலஸ்தீன ... தொடர்ச்சி ...**

**ஆர்ரி: பாலஸ்தீனப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், ஐக்கிய இராச்சியமும் கனடாவும் அங்கீகரித்தது எவ்வளவு சாதகமானது என நீங்கள் கருதுகிறீர்கள்?**

**மனுவேல் ஹஸாசியன்:** இந்த அங்கீகாரம் முக்கியமாக அடையாள ரீதியானது. கள நிலைமைகளை அது இப்போதைக்கு மாற்றப் போவதில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால் ஒரு ஆக்கிரமிப்பாளனாக இஸ்ரேல் தொடர்ந்தும் நடந்து வருகிறது என்பது மட்டுமன்றி அமெரிக்காவின் பூரணமான ஆதரவுடன் காலனீய குடியேற்ற இயக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இது எவ்வாறிருப்பினும் இஸ்ரேலின் உண்மையான இலக்குகளை இந்த அங்கீகாரம் வெளிக் கொணர்வதுடன், பாலஸ்தீன மக்களின் அடிப்படை உரிமையான பாலஸ்தீன சுயநிர்ணய உரிமைக்கு வலுச்சேர்க்கிறது. பிரான்ஸ், ஸ்பெயின், ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகள் தற்போது மேற்கொண்டுள்ள செயற்பாடுகள், இஸ்ரேல் மீதும் அமெரிக்கா மீதும் இராஜீக அழுத்தத்தைப் பிரயோகிக்கிறது.

**மோனா அபுவாமாறா:** இனவழிப்பு, பாலஸ்தீனப் பிரதேசங்களை இஸ்ரேலுடன் இணைத்தல், இனச்சுத்திகரிப்பு, இனவேற்றுமை போன்ற விடயங்களை ஏற்றுக்கொள்வதற்கு இன்று உலகம் தயாரில்லை என்ற செய்தியை இஸ்ரேலுக்கும் அதன் தற்போதைய அரசுக்கும் இந்த அங்கீகாரம் சொல்லுகின்றது. பாலஸ்தீன நிலத்தின் மீது தமக்கு உரிமை உண்டு எனக்கூறும் இஸ்ரேலின் நிலைப்பாட்டை அது நிராகரிப்பது மட்டுமன்றி, இரு தேசத் தீர்வையும் பாதுகாக்க முனைகிறது.

பூகோள ரீதியாக கனடாவின் நிலைப்பாடு காரணமாக, அதன் அங்கீகாரம் விசேடமான வகையில் முக்கியத்துவம் பெறுகிறது. உண்மையில், கனடா இவ்வாறான ஒரு அங்கீகாரத்தை முன்கூட்டியே மேற்கொண்டு, சற்று விரைவாக மற்ற நாடுகளும் இந்த அங்கீகாரத்தை மேற்கொள்ளச்செய்திருக்கலாம். இருப்பினும் பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் நாடுகள் கூட்டத்துடன் தன்னை இணைத்துக்கொள்ளும் கனடாவின் முடிவு, பன்னாட்டு சமூகங்களின் கூட்டிணைவைப் பலப்படுத்துவது மட்டுமன்றி, வரலாற்றின் சரியான பக்கத்தில் கனடாவை நிலைநிறுத்தியிருக்கிறது.

**ஆர்ரி: இவ்வாறான அங்கீகாரங்கள் உள்ளக அழுத்தங்களினாலும் வளர்ந்து வரும் முஸ்லீம் சனத்தொகையாலும் ஏற்படுத்தப்படுகின்றன என்று நெத்தன்யாகு கூறுகின்றார். அவரது கூற்றுக் குப் போதியளவு ஆதாரம் இருக்கிறதா?**

**மனுவேல் ஹஸாசியன்:** முஸ்லீம் மக்களுக் கும் இந்த அங்கீகாரத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இஸ்ரேலின் தற்போதைய கொள்கைகள் தான் இதற்கான உண்மையான காரணம் ஆகும். இஸ்ரேல் மேற்கொண்டுவருகின்ற படுகொலைகள், இனவழிப்பு, பாலஸ்தீன உடைமைகளை அழித்தொழித்தல் போன்ற விடயங்கள் உலகத்தின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்பியிருக்கின்றன. உணவைத் தடைசெய்தல், மக்களைக் கூட்டாகத் தண்டித்தல் போன்ற செயற்பாடுகளின் காரணமாக, பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பதும் ஆக்கிரமிப்புக்கு முடிவு கட்டுவதும், இரு தேசத் தீர்வை நோக்கி நகர்வதற்கு அவசியமான படிகளாக பன்னாட்டுச் சமூகம் நோக்குகிறது.

**மோனா அபுவாமாறா:** நெத்தன்யாகு முன்வைக்கும் விடயங்களுக்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்பது மட்டுமன்றி அது இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டது. பாலஸ்தீன மக்களின் போராட்டம் என்பது சமயத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல. அது சுதந்திரம், இறைமை, அடக்குமுறையிலிருந்து விடுதலை போன்ற விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டது.

தங்கள் ஆக்கிரமிப்பாளரின் மதம் எதுவாக இருந்தாலும் பாலஸ்தீனர்கள் ஆக்கிரமிப்பை நிச்சயமாக எதிர்ப்பார்கள்.

தனது கொள்கைகளை நியாயப்படுத்துவதற்கு, யூத மதத்துக்கும் யூத சமூகத்துக்கும் பின்னால் மறைந்து கொண்டு, இந்தப் பிரச்சினையை முஸ்லீம் மக்களுக்கும் யூத மக்களுக்கும் இடையேயான பிரச்சினையாகக் காட்டுவதற்கு நெத்தன்யாகு முயற்சிப்பதைக் காணமுடிகிறது. உலகளாவிய வகையில் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாகத் தற்போது நடைபெறுகின்றஆர்ப்பாட்டங்கள் ஒரு பரந்த பின்னணியைக் கொண்டது என்பதைப் புரிந்துகொள்ள நெத்தன்யாகு தவறி விடுகிறார். இனவழிப்பு, பலவந்தமாக மக்கள் இடம்பெயரச் செய்தல், இன வேற்றுமை போன்றவற்றை எதிர்க்கின்ற வேறு நாடுகளுக்குக் குடிபெயராத மக்கள் இந்த ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்கிறார்கள் என்பதை நெத்தன்யாகு புரிந்துகொள்வதில்லை. போர்க்குற்றங்கள் தொடர்பாகத் தனக்கிருக்கும் பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்கான இவ்வாறான வாச்சாலங்களை நெத்தன்யாகு பிரயோகிக்கிறார்.

**ஆர்ரி: பல நாடுகள் தற்போது பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கின்ற போதிலும், பாலஸ்தீன மக்களால் சுதந்திரத்தைச் சுவாசிக்க முடியாமல் இருப்பதற்கான காரணம் என்ன?**

**மனுவேல் ஹஸாசியன்:** இஸ்ரேலின் இராணுவ ஆக்கிரமிப்பு இன்னும் தொடர்ந்து கொண்டிருப்பதே அதற்கான காரணம் ஆகும். மேற்குக் கரைப் பிரதேசத்திலும் ஜெரூசலத்திலும், நிர்மாணிக்கப்பட்டிருக்கும் 96 சோதனைச் சாவடிகள், பாலஸ்தீன சமூகங்களின் தொடர்ச்சியைத் துண்டாடுகிறது.



ஜெரூசலத்தை மாலே அடுமிம் (Maale Adumim) உடன் இணைத்து 70,000 யூத மக்களை குடியமர்த்துவதை இலக்காகக் கொண்ட இ 1 (E1) என்ற திட்டம் பாலஸ்தீனத்தின் வடக்கையும் தெற்கையும் பிளவுபடுத்துவதை இலக்காகக் கொண்டது. இவ்வாறு, இரு தேசக் கொள்கையை நடைமுறைப் படுத்துவதை அது தடுத்து நிறுத்துகிறது.

1967ம் ஆண்டு எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு, திட்டமிடப்பட்டுள்ள எதிர்கால பாலஸ்தீன அரசு, மேற்குக் கரை, காஸா, கிழக்கு ஜெரூஸலம் போன்றவற்றை உள்ளடக்குகிறது. ஆனால் யூதக் குடியேற்றங்களின் தொடர்ச்சியான விரிவாக்கம் இது நடைபெறாமல் தடுக்கிறது.

**மோனா அபுவாமாறா:** பாலஸ்தீன மக்கள் களத்தில், தங்கள் சுதந்திரத்தை இன்னும் அடையவில்லை. அதற்கான காரணம் என்னவென்றால், இந்த அங்கீகாரத்தைத் தொடர்ந்து, அறநெறி ரீதியான, அரசியல் ரீதியான, மற்றும் சட்ட ரீதியான பொறுப்புகள் இந்த நாடுகளுக்கு இருக்கின்றன.

பாலஸ்தீனம் ஒரு அரசு அல்ல என்ற காரணத்தைக் காட்டி, கடந்த காலத்தைப் பார்க்கும் போது, பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்திலோ அன்றேல் பன்னாட்டு நீதிக்கான நீதிமன்றத்திலோ பாலஸ்தீன வழக்குகளை ஆதரிப்பதற்கு கனடா முன்வரவில்லை. அவ்வாறான ஒரு விவாதம் தற்போது செல்லுபடியாகாது.

வேறொரு நாடு போர்க்குற்றங்களை இழைக்கும் பொழுது, எவ்வாறு கனடா நடந்து கொள்ளுமோ அவ்வாறு பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்கு ஆதரவாகவும், பாலஸ்தீன தேசத்துக்கு ஆதரவாக கனடா செயற்பட முடியும்.

**ஆர்ரி: பாலஸ்தீன மக்களின் சுதந்திரத்தை நடைமுறைச் சாத்தியமானதொன்றாக மாற்றுவதற்கு பன்னாட்டுச் சமூகம் என்ன செய்ய வேண்டும்?**

**மனுவேல் ஹஸாசியன்:** இஸ்ரேல் மீது பொருண்மியத் தடைகளை விதித்து, வர்த்தக உடன்படிக்கைகளை மீளப்பெற்று, இராஜதந்திரிகளை மீள அழைத்து, ஆயுத வியாபாரத்துக்கு தடைகளைப் போட்டு, ஏன் இஸ்ரேல் விமானங்களுக்கான விமானப் பயணத் தடைகளையும் போட்டு உலகம் ஒரு உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

அவ்வாறான நடவடிக்கைகள் மூலம் இரு தேசக்கொள்கையை இஸ்ரேல் ஏற்க வேண்டிய அழுத்தத்தை அதற்குக் கொடுக்கலாம். ஏனென்றால் இந்தப் பிரச்சினையை இராணுவ அணுகுமுறையால் மட்டும் தீர்த்துவிட முடியாது.

**மோனா அபுவாமாறா:** அங்கீகாரம் மட்டும் போதாது. நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளைபன்னாட்டுச்சமூகம்கட்டாயம்மேற்கொள்ள வேண்டும்: இஸ்ரேல் மீது தடைகளை விதிக்க வேண்டும், குடியேற்றங்களுக்குச் சாதகமான வர்த்தக ஒப்பந்தங்கள் மீளப்பெறப்பட வேண்டும். இஸ்ரேல் தொடர்ந்தும் இனவழிப்பையும் பட்டினிபோடும் செயற்பாடுகளையும் தொடரும் பட்சத்தில், அதனுடன் இராஜீக உறவுகளைத் துண்டிக்க வேண்டும். அத்துடன் குடியேற்றவாசிகளும் குடியேற்றங்களும் பன்னாட்டு ஒப்பந்தங்கள் வாயிலாகப் பயனடைவதற்கு முடிவு கட்ட வேண்டும்.

வெறும் அடையாள ரீதியான அங்கீகாரத்துடன் மட்டும் நிற்காது, இவ்வாறான செயற்பாடுகளைப் பயன்படுத்துவதன் மூலம் தான் ஆக்கிரமிப்பு, அடக்குமுறை, குடியேற்ற விரிவாக்கம் போன்றவற்றை இஸ்ரேல் ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அழுத்தத்தைப் பிரயோகித்து, பாலஸ்தீன மக்கள் உண்மையான இறைமையையும் சுதந்திரத்தையும் அடைவதற்கு உதவ முடியும்.

**அடுத்து நடக்கப் போவது என்ன?**

பிரதமர் நெத்தன்யாகுவைப் பொறுத்த வரையில் தற்போது அவர் அமெரிக்காவுக்குச் சென்று, ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் உரையாற்றுவதுடன், அதனைத் தொடர்ந்து அமெரிக்க அதிபர் ட்ரம்பையும் சந்திக்கத் தயாராகி வருகிறார். இந்தப் பயணத்தை முடித்துக்கொண்டு மீண்டும் இஸ்ரேல் திரும்பும் பொழுது, அமெரிக்க அதிபரின் ஆசீர்வாதத்துடன், மேற்குக் கரையின் சில பகுதிகளை இஸ்ரேலுடன் அவர் இணைக்கப் போகின்றார். அவ்வாறான ஒரு நடவடிக்கையை நெத்தன்யாகு மேற்கொள்ளுவாராக இருந்தால், பாலஸ்தீன அங்கீகாரம் தொடர்பாக பன்னாட்டளவில் முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்பாடுகளுக்கு அது ஒரு பலத்த அடியாக இருக்கும்.

பாலஸ்தீனத்தை 140 நாடுகள் ஏற்கனவே அங்கீகரித்திருக்கும் பின்புலத்தில், மேலும் நான்கு மேற்குலக சக்திகள் இப்போது இணைந்திருப்பதுடன், மேலும் பல நாடுகள் இணையலாம் என்றும் எதிர்பார்ப்பும் முன்வைக்கப்படுகிறது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் எதிர்வரப் போகும் நாட்கள் மிக முக்கியமான நாட்களாக அமையப் போகின்றன.

**நன்றி: rt.com**

## வெல்வதற்காக .. . தொடர்ச்சி ...

எதிர்பார்த்த எவையும் கிடைக்கவில்லை ஆனால் பொதுவான சில அபிவிருத்திகள், ஊழல் வாதிகளுக்கு எதிரான நீதிவிசாரணை, போதை வஷ்த்து கடத்தல் புள்ளிகள் கைது, முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகள் இரத்து,என சில விடயங்கள் நடந்துள்ளது உண்மை.

ஆனால் கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழரசுக்கட்சியில் உள்ள சிலர் ஓடி ஓடி பிரசாரம் செய்த சஜீத்பிரமதாசா தற்போது எதிர்கட்சிதலைவராக நாடாளுமன்றில் இருந்தும் கூட வடகிழக்கில் உள்ள செம்மணி புதைகுழி தொடர்பாகவோ, மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை தொடர்பாகவோ, கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலக பூரண நிர்வாம் தொடர்வாகவோ, மன்னார் காற்றலை தொடர்பாகவோ, அத்துமீறிய சிங்கள குடியேற்றங்கள் தொடர்பாகவோ, கடந்த ஒரு வருடமாக வாயே திறக்கவில்லை அவருக்கு வாக்களிக்குமாறு இரவு பகலாக பிரசாரம் செய்தவர்கள் சஜித்பிரமதாசாவின் உண்மை முகம் இப்போதாவது தெரிந்திருக்கும்.

தமிழ்தேசியகட்சிகளில் 07 கட்சிகள் அன்று தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவு வழங்கிய போது அதனை எதிர்த்த தமிழரசுகட்சி பதில் செயலாளர் சுமந்திரன் அணியும், கஜேந்திரகுமார் தலைமயிலான தமிழ்தேசிய மக்கள் முன்னணியும் இன்று ஒரே மேசையில் அமர்ந்து பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கும் கையொப்பம் பெறும் போராட்டத்திற்கு ஆதரவு தருமாறு ஒற்றுமைபட்டு ஊடக சந்திப்பை நடத்தியுள்ளனர்.

காலம் கடந்த இந்த ஞானம் கடந்த ஜனாதி பதி தேர்தலில் பிறந்திருப்பின் தமிழ் பொது வேட்பாளரை அனைத்து தமிழ் தேசிய கட்சிகளும் ஆதரித்தனர் என்ற செய்தி பலமாக காட்டப்பட்டு தமிழ்பொதுவேட்பாளர்பெற்ற226343 வாக்குகளை 600000 வாக்குகளாக மாற்றியிருக்கலாம்.

இனியாவது திருந்தி தமிழ் மக்களுடைய இனப்பிரச்சனை விடயங்களில் எல்லாம் சகல கட்சிகளும் ஒருகுடையில் ஒரு குரலாக போராடு வது காலத்தின் தேவை. இது தியாகி தீலிபனின் 38 வது ஆண்டிலாவது உணரப்படுவது அவசியம்.

இதேவேளை தமிழ் பொதுவேட்பாளராக நிறுத்தப்பட்ட அரியநேத்திரனுக்கு தமிழரசுக்கட்சி யின்1, வது பதில் பொதுச்செயலாளர் சத்தியலிங்கம் 2024 செப்டம்பர் 11ல் விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பினார், அதற்கான விளக்கத்தை 2024 செப்டம்பர் 14ல் அரியநேத்திரன் அனுப்பினார் அதற்கான பதில் அவருக்கு கிடைக்கவில்லை பின்னர் பதில் கிடைக்கவில்லை என 2025 ஜனவரி 10 ல் மீண்டும் 1வது பதில் செயலாளருக்கு கடிதம் அனுப்பியும் இதுவரை ஒருவருடம் கடந்தும் எந்த பதிலும் இல்லை.தற்போது அவர் பதவி விலகிய நிலையில் 2 வது பதில் பொதுச்செயலாளராக சுமந்திரன் கடந்த 2025 பெப்ரவரி 16 ல் களுவாஞ்சிகுடி மத்தியகுழு கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டார்.

அரியநேத்திரன் ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னரும் தொடர்ந்து தமிழ் அரசுக்கட்சிக்கே ஆதரவாக செயல்பட்டுவருகிறார் 2024 நவம்பர் 14 ல் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் இலங்கை தமிழரசுக்கட்சியை ஆதரித்து மட்டக்களப்பில் பிரசாரம் செய்தார், மூன்று பாராளுமன்ற உறுப் பினர்கள் தெரிவானதில் அரியநேத்திரனின் பங்களிப்பும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்தது.

அதுபோல் கடந்த 2025 மே 06ல் இடம் பெற்ற உள்ளூராட்சி தேர்தலிலும் தமிழரசுக் கட்சிக்கே அவர் ஆதரவு வழங்கினார் என்பது குறிப் பிடத்தக்கது.

## அமெரிக்காவின்... தொடர்ச்சி ...

இயக்கப்பட்ட எரிசக்தி ஆயுதங்கள் (Directed energy weapons) என்பன அமெரிக்க விமானப்படையின் NGAD காலவரிசையை சீனா மீறக்கூடும் என்பதைக் கூறுகின்றது.

இது ஒரு அணிவகுப்பு அல்லது ஒரு விமானந்தாங்கி கப்பல் தொடர்பான செய்தி அல்ல மாறாக சீனாவின் கோட்பாட்டில் ஒரு காத்திரமான மாற்றத்தைப் பற்றியது அதாவது பிராந்திய ஆளுமையில் இருந்து உலகளாவிய ஆளுமைக்கான அதன் பாய்ச்சல். எனவே அமெரிக்கா அதன் படை நிலையை, குறிப்பாக இந்தோ-பசிபிக் பகுதியில் மறு மதிப்பீடு செய்ய வேண்டும். முன்னோக்கிய உறுதியான அடித்தளம், கூட்டணி ஒருங்கிணைப்பு மற்றும் தடுப்பு வரம்புகள் என்பன மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்.

தொழில்நுட்பம் விரைவாக மேம்படுத் தப்பட வேண்டும்,NGAD, ட்ரோன் திரள்கள் மற்றும் இயக்கப்பட்ட எரிசக்தி ஆயுதங் கள் போன்ற திட்டங்கள் விரைவாகக் செயல் படுத்தப்பட வேண்டும். அதிகாரத்துவ செயலற்ற தன்மையால் தற்போது தனது தேசிய பாதுகாப்பு அபாயமாக உள்ளது என அமெரிக்கா உணர்கின்றது.

கட்டளை தளங்களை ஒருங்கிணைப் பதற்கான ஹெக்செத்தின் முயற்சி (EUCOM and AFRICOM போன்ற தளங்களை இணைத்தல்) செலவுக் குறைப்பு அல்ல, அது வளங்களின் மறு ஒதுக்கீடு. அதாவது பசிபிக் தான் புதிய ஈர்ப்பு மையம்.

ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் நேட்டோ கூட்டணிகள் பகிரப்பட்ட தொழில்நுட்பம் மற்றும் கோட்பாடுப் பாதையில் கூட்டணி ஒத்திசைவு இணைக்கப்பட வேண்டும். துண்டு துண்டான செயற்பாடுகள் தோல்வியடையும்என அமெரிக்கா கருதுகின்றது.

ஹெக்செத்தின் அவசரம் என்பது சீனாவின் அணிவகுப்புடன் பொருந்துவது மட்டுமல்ல. ஹைப்பர்சோனிக்ஸ், ஸ்டெல்த் ட்ரோன்கள் மற்றும் குவாண்டம் ஜாமிங் ஆகியவை அடிப்படை அச்சுறுத்தல்களாக இருக்கப்போகும் எதிர்கால மோதலில் தாம் தப்பிப் பிழைக்கும் தன்மை தொடர்பானது. வேர்ஜீனியாவிற்கு அழைக்கப் பட்ட ஜெனரல்கள் மற்றும் அட்மிரல்கள் பேசுவதை விட அதிகமாக செயற்பட வேண்டும், செயல்படுத்தக்கூடிய திட்டங்கள், அதற்கான காலக்கெடு மற்றும் செயல்பாட்டு மாற்றங்களுடன் அவர்கள் தமது களங்களுக்கு செல்ல வேண்டும்.

கூட்டத்தில் எத்தனை அதிகாரிகள் கலந்து கொண்டனர் என்பதை வரலாறு நினைவில் கொள்ளாது. போரில் அவர்கள் தீர்க்கமாக செயல் பட்டார்களா என்பதை தான் அது நினை வில் கொள்ளும். சீனா அணிவகுப்புகளை நடத்துவ தில் இருந்து மாறி தற்போது படைகளை களமு னைகளில் நிறுத்துவதற்குதயாராகி வருகின்றது. அமெரிக்கா விவாதத்திலிருந்து தடுப்புக்கு நகர வேண்டும்.

ஹெக்செத் வெற்றி பெற்றால், இந்த அவசரக் கூட்டம் அமெரிக்கா தனது இராணுவ எதிர்காலத்தை மறுபரிசீலனை செய்த தருணமாக நினைவுகூரப்படலாம். அவர் தோல்வியுற்றால், சீனா மூலோபாய உந்துதலைக் கைப்பற்றிய தருணமாக நினைவுகூரப்படலாம்.

## புலிகள் அமைப்பு ... தொடர்ச்சி ...

இரண்டு நாட்கள் சிறையில் வைத்து அவரை விசாரித்ததன் அடிப் படையில் புலிகள் அமைப்பினரு க்கு, 42 கோடி இந்திய ரூபாயை மாற்ற முயன்றதாகக் குறித்த பெண் வாக்குமூலம் அளித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இதன் அடிப்படையில் 51 வயதான குறித்த பெண் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப் படுவதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

LENIO
Architectural Planning | Structural Design | Party Wall Agreement
Sadadcharam Easwaran (Easan)
BEng MSc DIC CEng C.BuildE MICE MCABE MFPWS
Director
+44 (0) 20 4558 8272
+44 (0) 7831 199 962
easan@leniogroup.com
www.leniogroup.com
5a St. James's Road
Croydon, CR0 2SB
ice cabe FPWS

JR Print
www.jrprint.com
WhatsApp 07939 998730
61, Hoe Street, Walthamstow
London E17 4SA
Email:jrprintuk@gmail.com
Fast, Relaible & Friendly Service
Guaranteed Delivery Within 72 Hours In Europe at Minimal Cost
Call For Free Guatation

## இலங்கையின்... தொடர்ச்சி ...

**நீங்கள் சர்வதேச அரங்கிலே பலதரப்பினருடன் இந்த விடயம் குறித்து பேச்சுக்களையும், முறைப்பாடுகளையும், சாட்சியங்களையும் அளித்துள்ள நிலையில் அவர்களின் முயற்சிகள் எவ்வாறு உள்ளன?**

உலகநாடுகளின் அழுத்தமில்லாத வரையில் இலங்கை அரசாங்கம் தான் தோன்றித்தனமாகத்தான் செயற்படும் என்பது வெளிப்படையானது. ஆகவே நாங்கள் சந்திக்கின்ற அனைத்து சர்வதேச தரப்புக்களிடத்திலும் அழுத்தங்களை அளிக்குமாறே தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றோம். அவர்களும் அதுதொடர்பில் நடவடிக்கைகளை எடுக்காமலில்லை. எனினும் நாம் மேலும் அழுத்தங்களை வழங்குமாறு தற்போதைய சந்தர்ப்பத்திலும் கோருகின்றோம்.

**தாயகத்தில் இருக்கின்ற பாதிக்கப்பட்ட ஏனைய பெற்றோர்கள் அடுத்த கட்டமாக என்ன செய்யலாம் என்று கருதுகிறீர்கள்?**

தாயகத்தில் உள்ள பெற்றோர்கள் இன்று எதனையும் செய்ய முடியாத நிலையில் உள்ளார்கள். காரணம் தமது நீதிக்காக நடவடிக்கைகளை முன்னெடுக் கின்றபோது முப்படையினரும், புலனாய்வுத்துறையினரும் அவற்றை முடக்குவதற்கே திட்டமிட்டு முயல்வார்கள். நெருக்கடிகளை ஏற்படுத்துவார்கள். ஆகவே அவர்களால் எதனையும் செய்ய முடியாது. புலம்பெயர்ந்தவர்களே பாதிக்கப்பட்ட உறவு களுக்காக நடவடிக்கைகளை வெளியிருந்து மேற்கொள்ள முடியும். அது தான் சாத்தியமான தொரு வழியாக இருக்கின்றது.

**மாவட்ட நீதவான் நீதிமன்றம் போதிய ஆதாரங்கள் இல்லையென்று கூறுகின்ற நிலையில் தங்களிடத்தில் எத்தகைய ஆதாரங்கள் இருக்கின்றன?**

என்னிடம் போதிய ஆதாரங்கள் இருக்கின்றன. எனது மகனை தொலைத்துவிட்ட நிலையில் தற்போது பாதிக்கப்பட்ட ஒரு தரப்பாக இருக்கும் என்னையும் நீதிமன்றம் தீர்ப்பளிக்க முன்னதாக அழைத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. இதன்மூலம் அரசியல்வாதிகளின் பிடியில் நீதித்துறை இருக்கின்றது என்பதையும் அரசியல்வாதிகளின் வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டே நீதித்துறை செயற்படுகின்றது என்பதையும் உள்ளங்கை நெல்லிக்கனியாக காட்டுகின்றது.

**அவற்றை பயன்படுத்தி தாயகத்தில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை உள் நாட்டில் முன்னெடுக்க முடியுமா?**

என்னிடம் ஆதாரங்கள் இருந்தாலும் அவற்றைப் பயன்படுத்தி அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியாது. காரணம், உள்நாட்டில் நாம் இத்தகைய விடயங்களை முன்வைத்து நீதித்துறையை நாடுகின்றபோது எமது பாதுகாப்புக்கு யார் பொறுப்பு என்ற கேள்வி எழுகின்றது. ஏற்கனவே நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு இழுத்தடிப்புக்கள் செய்யப்பட்ட தருணங்களில் எல்லாம் இந்த கொடூரம் தொடர்பான அநேகமான சாட்சிகள் தமது பாதுகாப்பு நிமித்தம் தற்போது நாட்டை விட்டு வெளியேறிவிட்டார்கள். இவ்வாறான நிலையில் எவ்வாறு அவர்களிடத்தில் நீதியை எதிர்பார்க்க
முடியும்.

• • •

## பி.ஜே.பியுடன் .. . தொடர்ச்சி ...

காங்கிரஸ் அமைப்புடன் இலக்கு ஊடகம் தொடர்புகளை மேற்கொள்ள முயற்சிகளை செய்து வருகின்றது.

கடந்த தசாப்தத்தில், இந்திய கோ கோ கூட்டமைப்பின் நிறுவனம் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் அதன் விளையாட்டு நிகழ்வுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. அதன் தடம் இப்போது இந்தியா முழுவதும் 680 க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் பரவியுள்ளது, உலகளாவிய ரீதியில் ஆறு கண்டங்களிலும் 55 க்கும் மேற்பட்ட நாடுகளில் விரிவடைந்துள்ளது.

அண்மையில் இலங்கை அரச தலைவர் அனுர திஸ்ஸநாயக்க யாழ் மண்டைதீவு பகுதியில் சர்வதேச துடுப்பாட்ட மைதானத்தை அமைக்கும் பணிகளுக்கான ஆரம்பத்தை மேற்கொண்டுள்ள நிலையில் இந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது. மேலும் மண்டைதீவுப் பகுதியில் 200 ஏக்கர் காணிகளை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வாங்கி குவித்துள்ளதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

## பார்த்தீபன்... தொடர்ச்சி ...

யிரைத் துறந்து 38வருடங்கள் ஆகியுள்ளன.

ஆனாலும் ஈழத்தமிழர்கள் தற்போதும் உரிமைகள் மறுக்கப்பட்டநிலையிலே தமிழர் தாயகப் பரப்பில் வாழ்ந்து வருகின்றனர்.

தமிழர் தாயகப்பரப்பில் திட்ட மிட்ட சிங்களக்குடியேற்றங்கள்தற்போதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரி வித்தார்

தொடர்ந்தும் தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தமிழர் தாயகப் பரப்பில் அதிகரித்த இராணுவமயமாக்கல் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே தியாகதீபம் திலீபன் எந்த நோக்கத்திற்காக பசித்திருந்து தனது இன்னுயிரைத் தியாகித்தாரோ அந்த நோக்கமும், அவரின் எண்ணமும் இதுவரை நிறைவேறவில்லை.

அந்தவகையிலே 'பார்த்தீபன் இப்போதும் பசியோடுதான் இருக்கின்றான்' என்பதை இவ்வுயரிய சபையிலே பதிவு செய்துகொள்ள விரும்புகின்றேன் என்று பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குறிப்பிட்டார்.

## விஜயின் வழி... தொடர்ச்சி ...

அன்புநண்பன் ராஜ்மோகன் பேசுகிறேன்.

இன்று வாழ்க்கை வட்டத்திலே, அரசியல் அரங்கத்திலே வலம் வந்து கொண்டிருக்கும் இந்த ராஜ்மோகன், என் வாழ்க்கைபயணத்தின் அரிச்சுவட்டை ஆரம்பித்ததே ஒரு வானொலி ஊடாகதான் என்பதை நினைவு கூறுகிறேன். வானொலிஅறிவிப்பாளராக தான் எனது கலைப் பயணம் தொடங்கியது, எனது திசைவழி பயணமே ஆரம்பித்தது.

இன்று, 'இலக்கு' என்ற இந்த ஒரு வானொலி ஊடகம் ஊடாக நான் பேசுவதை நினைக்கின்ற பொழுது, மற்றற்ற மகிழ்ச்சி, நெஞ்சமெல்லாம் நிறைகிறது. இன்று தமிழனுக்கு என்ற ஒரு நாடு இல்லை. ஆனால் தமிழன் இல்லாத நாடே இல்லை. 196 நாடுகளில் இருக்கக்கூடிய தமிழர்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் ஓங்கி ஒலிக்கக்கூடிய இலக்கு ஊடகத்தில் பேசக்கூடிய பொன்னான வாய்ப்பு எனக்கு கனிந்திருக்கிறது.

இதற்கு ஏற்பாடு செய்த அந்த நல்ல நெஞ்சங்களுக்கு, என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் கூறி, நம்முடையநிகழ்ச்சிக்குள்ள நானும் வரேன். உங்க கேள்விகளை கேளுங்க, என்னுடைய பதில்களை பதிவு செய்கிறேன்.

## இந்தியாவின் ... தொடர்ச்சி ...

அதிகாரிகள் தடை செய்துள்ளனர்.

உயிரிழப்புகள்குறித்துஎந்தஅதிகாரப்பூர்வ அறிக்கையும் வெளியிடப்படவில்லை, ஆனால் சீனாவின் எல்லையை ஒட்டியுள்ள பிராந்தியத்திற்கு கூடுதல் அதிகாரம் கோரி உண்ணாவிரதம் இருக்கும் உள்ளூர் ஆர்வலர் ஒருவர், காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டில் மூன்று முதல் ஐந்து பேர் கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது என்று இந்திய ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

மார்ச் 21, 2024 அன்று இமயமலைப் பகுதியான லடாக்கிற்கு அரசியலமைப்பு பாதுகாப்புகள் மற்றும் மாநில அந்தஸ்து கோரி ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒரு உள்ளிருப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். நிலம் மற்றும் விவசாய அதிகாரங்கள் கொண்ட சுயாட்சிக்காக இந்திய அரசாங்கத்திடமிருந்து மாநில அந்தஸ்து மற்றும் அரசியலமைப்பு விதிகளை கோரும் கூட்டாட்சி நிர்வாகப் பகுதியில் ஒரு பெரிய இயக்கத்தின் ஒரு பகுதியாக இந்த ஆர்ப்பாட்டங்கள் உள்ளன.

2019 ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடியின் அரசாங்கம் இந்திய நிர்வாகத்தில் உள்ள காஷ்மீரில் இருந்து இப்பகுதியைப் பிரித்தபோது லடாக் அதன் சுயாட்சியை இழந்தது. அப்போதிருந்து, பெரும்பான்மையான முஸ்லிம்-பௌத்த பிரதேசம் புது தில்லியில் இருந்து நேரடியாக நிர்வகிக்கப்படுகிறது.

சீனாவுடன் நீண்ட எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் லடாக், இந்தியாவிற்கு ஒரு மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாகும்.

## இந்திய இலங்கை ... தொடர்ச்சி ...

ஒரு தேர்தலை குறைமாத பிரசவமாக அரசியல் 2008, 2012, ல் இரண்டு கிழக்கு மாகாணசபை தேர்தலும்,2013, ல் ஒரே யொரு வடமாகாணசபை தேர்தல் மட்டுமே இடம்பெற்று எந்த ஒரு அதிகாரமும் இன்றி மாகாணசபை தேர்தல்களும் நடத்தமுடியாமல் காலத்தை இழுத்தடிக்கும் நிலையே தொடர் கிறது.

இப்போது தமிழீழம் கேட்டு போராடிய இனம் சமஷ்டி கேட்டு போராடிய இனம் மாகாணசபை தேர்தலை நடத்துங்கள் என கேட்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

இந்திய அரசும் செவிடன் காதில் ஊதிய சங்கு போன்று அவர்களால் இலங்கை அரசை வலியுறுத்த வக்கில்லாமல் ஐநா மனித உரிமை 60, வது கூட்டத்தொடரில் இந்திய தரப்பு இலங்கையில் மாகாணசபை தேர்தலையும், 13, வது திருத்தம் தொடர்பாகவும ஜெனிவா வில் இந்தியா சார்பாக கலந்துகொண்ட பிரதிநிதி கதைத்தார் என்றால் இந்தியாவால் அந்த விடயத்தை இலங்கையிடம் கூறி வலியுறுத்த முடியாது என்பதை அல்லவா வெளிக்காட்டியுள்ளது.

ஈழத்தமிழர்களுக்கான இனப்படுகொலைக்கான சர்வதேச நீதியும் இல்லை. அரசியல் தீர்வும் இல்லை, புதிய அரசியல் யாப்பும் இல்லை, அப்படி மல்லுக்கட்டி சில வேளை புதிய அரசியல்யாப்பு வந்தாலும் ஈழத்தமிழர்களை புறக்கணித்து கடந்த 2015ல் நல்லாட்சி அரசில் பேசிய தமிழ் தரப்பு ஏற்காத ஏக்கியராச்சிய அரசியலமைப்பை மீண்டும் தூசிதட்டி முன்வைக்கவே தேசிய மக்கள் சக்தி அரசு முயல்கிறது.

ஈழத்தமிழினம் போராடும் ஒரு இனமாகவே யார் ஆட்சியில் இருந்தாலும் தொடரப் போகிறது இதுதான் தியாகி திலிபனின் 38 வது ஆண்டு நினைவில் நாம் கற்றுக்கொண்ட பாடம்.

## ஐ.நா.வின் புதிய . .. தொடர்ச்சி ...

நோக்கிய நீதிக்கான தமிழ் மக்களின் நீண்ட காலப் போராட்டத்தை முழுமையாக பலவீனப் படுத்தியுள்ளதோடு மட்டுமல்லாது, இதற்குமேல் ஐ.நாவை நோக்கிய செயற்பாடுகளும், எதிர்பார்ப் புக்களும் வீணானது என்ற கருத்துருவாக்கம் மேலெழுந்துள்ளது.

அதேநேரம், பிரேரணையின் முதலாவது வரைவில், நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு வழிகோலிய காரணிகளில் ஒன்றாக 'இராணுவ மயமாக்கம்' என்ற சொல் சுட்டிக்காட்டப்பட்டிருந் தது. ஆனால், திருத்தப்பட்ட வரைவில் இந்தச் சொல் நீக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் நிலவும் அதிகப்படியான இராணுவப் பிரசன்னம், நில அபகரிப்பு மற்றும் இயல்பு வாழ்க்கைக்கு ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தல்கள் குறித்து சர்வதேச கவனத்தை ஈர்ப்பதற்கு இந்தப் பதம் மிக முக்கியமானதாக இருக்கின்றது. ஆனால் அப்பதம் நீக்கப்பட்டமை, தாயகத்தில் இராணு வமயமாக்கலின் தாக்கத்தைக் குறைமதிப்புக்கு உட்படுத்தும் முயற்சியாகும்.

அதேபோன்று, பொறுப்புக்கூறல் தொடர் பான பந்தியில், முன்னர் 'தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் உள்ளடங்கலாக சம்பந் தப்பட்ட சகல தரப்பினராலும் நிகழ்த்தப் பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் செயற் திறன் மிக்க பொறுப்புக்கூறல் செயன்முறை உறு திப்படுத்தப்படவேண்டும்' எனக்குறிப்பிடப்பட் டிருந்தது.

தற்போது அதில் திருத்தங்கள் மேற்கொள் ளப்பட்டு வெறுமனே 'பொறுப்புக்கூறல் உறுதிப் படுத்தப்படவேண்டும்' என்று மாற்றியுள்ளனர். 'செயற்திறன்மிக்க' என்ற வார்த்தை நீக்கப்பட்டு ள்ளதன் மூலம், பொறுப்புக்கூறுதலின் தரம் மற்றும் வீரியம் குறித்த அழுத்தம் வெகுவாகவே குறைக் கப்பட்டுள்ளது என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

ஐ.நா.பிரேரணையில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் திருத்தங்கள், இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு உரிய நீதியையோ அல்லது நிலையான அரசியல் தீர்வையோ பெற்றுக் கொடுக்காது என்ற அச்சத்தை உறுதிப்படுத்துகின்றன.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 80வது கூட்டத் தொடரில் உரையாற்றிய இலங்கை ஜனாதி பதி அநுரகுமார திசநாயக்க கூட, யுத்தத்தின் வலிகளை உணர்ந்திருப்பதாக கூறினார். காசாவில் போர் நிறுத்தப்பட வேண்டும் என்றார். பலஸ் தீனத்தை அங்கீகரிக்கின்றோம் என்றார்.

ஆனால் தனது நாட்டில் அனைத்து பிரச்சினைகளுக்கும் அடிப்படையாக இருக்கின்ற தேசிய இனப்பிரச்சினை பற்றி கிஞ்சித்தும் ஒரு வார்த்தையைக்கூட பிரதிபலித்திருக்கவில்லை.

வறுமையும், போதைப்பொருள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயற்பாடுகளையும் முடக்குவது தான் முதல் பணியாக வெளிப் படுத்தியிருக்கின்றார். தேசிய இனப்பிரச்சினை, பொறுப்புக்கூறல் உள்ளிட்டவற்றை மறுதலித் திருக்கின்றார்.

அவ்விதமான நிலைப்பாட்டில் உள்ள ஆட்சியில் உள்ள அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கத்துக்கு இந்தப் பிரேரணையின் உள்ள டக்கம் சர்வதேச ரீதியாக அங்கீகாரம் அளிப் பதாகவே உள்ளது.

அந்த வகையில் பார்க்கின்றபோது, எதிர் காலத்தில் தமிழ் மக்கள் தங்களுடைய தேசியப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நோக்கிய உரை யாடலை ஆரம்பிப்பதற்கு கூட வாய்ப்பை வழங் காத வகையில் தான் இந்தப்பிரேரணையின் உள் ளடக்கம் காணப்படுகின்றது.

ஆகமொதத்தில் திருத்தப்பட்டுள்ள இந்த வரைவு, தமிழ் மக்களின் வரலாற்றுத் துயரத்தை யும், அவர்களின் தற்போதைய அவலத்தையும் முழுமையாக மறைத்து நீதிக்கான உறுதியான பொறிமுறைகள் இல்லாத நிலையில், அரசாங் கத்தின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு அதற் கான கால அவகாசம் கொடுக்கும் வெற்று ஆவண மாகவே இருக்கப்போகிறது.

61ஆவது, 64ஆவது அமர்வுகளில் இலங்கை குறித்த வாய்மொழிமூலமான அறிக்கை சமர்ப்பிப்புக்கான விடயமும் அகற்றப்பட்டுள்ள நிலையில் தமிழ் மக்கள் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையிடம் எதனை எதிர்பார்க்க முடியும்.

• • •

## தமிழ்த் தேசிய . . . தொடர்ச்சி . . .

குழு உறுப்பினர் வசந்த முதலிகே தலைமையிலான குழுவினர், அகில இலங்கை விவசாய சம்மேளன பிரதிநிதிகள் உட்பட பலரும் தற்போது வரை கை கோர்த்துள்ளனர்.

சத்தியாக்கிரக போராட்டத்தை ஆரம்பித்த நிலையிலும் இவர்களுடனான அறிக்கைகளை நேரடி கள விஜயம் செய்து வரும் போது போராடி போராடி களைத்து போய் விட்டதுடன் அவர்களது குரல்களும் நசுக்கப்பட்டுள்ளதை இந்த வேளையில் அவதானிக்க முடிந்தது கதைப்பதில் பெரும் சிரமத்தை எதிர் நோக்கிய நிலையில் இருந்த போது இது குறித்து முத்து நகர் விவசாய சம்மேள பிரதிநிதியும் மூன்றாவது தலை முறை விவசாயியான செய்லாப்தீன் றிஸ்வான் தெரிவிக்கையில், " எங்கள் பிரச்சினை அனைவருக்கும் தெரிந்திருக்கும் 1972ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை 53 வருடங்களாக விவசாயம் செய்து வந்த காணி அந்த காணியை இந்த அரசாங்கம் எங்களிடம் இருந்து பெற்று இந்திய கம்பனிகளுக்கு சோளர் பவர் திட்டங்களுக்கு மூன்று கம்பனிகளுக்கு வழங்கியுள்ளனர்.அரசாங் கத்திடம் ஒரே ஒரு கோரிக்கையாக எங்கள் விவசாய நிலங்களை எங்களுக்கே தாருங்கள்.

விவசாயத்தை அழிக்க வேண்டாம். திருகோணமலை மாவட்ட ஆளுங்கட்சி பாராளு மன்ற உறுப்பினர்களிடத்தில் கேட்ட போதும் தீர்வு கிடைக்கவில்லை. 2025.08.15 ல் ஜனாதிபதி செயலகம் முன் ஆர்ப்பாட்டம் செய்து நீதி கேட்ட போது 39ம் திகதி வரை பதில் தருவதாக பொய் கூறினார்கள். இதனால் சத்தியாக் கிரகத்தை ஆரம்பித்து பிரதமரிடம் கோரிக்கையை முன்வைத்தோம் இவரை சந்திப்பதில் பெரும் கஷ்டத்தை எதிர் நோக்கினோம். கம்பெனிகளுடன் ஒப்பந்தம் செய்து தர முடியாது என பிரதமர் கூறினர்.

எங்கள் கோரிக்கையை ஏற்று நல்ல தொரு தீர்வு கிடைக்கும் என பிரதமர் சந்திப்பில் கிட்டும் என நம்புகிறோம். எங்கள் விவசாய நிலத்தை பெற்றுத் தரவும் கடந்த செய்கைக்கான இழப்பீடு தரவும் துறை முக அதிகார சபையின் தொல்லையில் இருந்தும் பாதுகாக்குமாறும் இதன் போது மேலும் பிரதமரிடம் கோரிக்கையை முன்வைத்த போது பத்து நாட்களில் தீர்வளிப்பதாக தெரிவித்தோம் .சாதகமான தீர்வு கிடைக்கும் வரை சத்தியாக்கிரக போராட்டத்தை கைவிட மாட்டோம் எனவும் தெரிவித்தார்.

குறித்த விவசாயிகளுக்காக இலங்கை நாடாளுமன்ற எதிர்க் கட்சி தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாச அண் மையில் உரிய விவசாய நிலத்துக்கு சென்று விவசா யிகளுடன் சந்திப்பை நடாத்தியுள்ளார்.

இது போன்று ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் இம்ரான் மஹ்ரூப் அவர்களும் நாடாளு மன்றிலும், வெளியிலும் குரல் கொடுத்து பேசியுள்ளார்.

இது தொடர்பில் சத்தியாக் கிரக போராட்டை திருகோணமலை மாவட்ட ஒருங்கி ணைப்பு குழு கூட்டம் இடம் பெற்ற போதும் கூட தொடராக விவசாயிகள் நடாத்தியபோதும் சாதக மான பதில் கிகைக்கவில்லை.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரொசான் அக்மீமனவை விவசாயிகள் அன்றைய மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போதே சந்தித்தனர் இதில் முன்னால் பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் அவர்களும் கலந்து கொண்டார் இது குறித்து முன்னாள் பிரதியமைச்சர் தனது அரசியல் அதிகார காலம் தொடர்பிலும் முத்து நகர் விவசாயிகளின் ஆரம்ப வரலாறு தொடர்பிலும் இவ்வாறு தெரிவித்தார் "

முத்து நகர் விவசாய சம்மேளனங்கள் கடந்த 150 வருடங்களாக பாவித்த விவசாய நிலங்களை பெற்றுக் கொள்ள என்னை விவசாயிகள் அழைப்பு விடுத்தார்கள் இருந்த போதிலும் உரிய மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரை சந்திக்க முடியவில்லை.

மாவட்ட தேசிய மக்கள் சக்தி பாராளு மன்ற உறுப்பினரே அங்கு இருந்தார் அது சாத்தியமாகவில்லை. முத்து நகர் பிரதேச முதல் குடியேற்றம் 1973ல் ஏ.எல்.அப்துல் மஜீத் அவர் களால் ஆயிரக்கணக்கான விவசாயிகளை விவசாயம் செய்ய கிணறுகள் வீடுகளை அமைத்து 1972, தொடக்கம் 1977 வரை ஐந்து வருடங்களாக வழங்கியிருந்தார் அதன் பிற்பாடு துறை முக அமைச்சராக இருந்த லலித் அதுலத் முதலி அவர்கள் திருகோணமலை மாவட்டத்தில் இரு முறை தாக்குதளுக்கு உள்ளான போது மக்கள் குடியிருப்பு காணிகளை சுமார் பத்தாயிரம் ஏக்கர் காணிகளை துறை முக அதிகார சபைக்கு வழங்கினார்.

இதன் பின் அமைச்சர்களாக வந்த எம்.எச். எம்.அஷ்ரப், றவூப் ஹக்கீம், எம்.ஈ.எச்.மஹ்ரூப் போன்றோர்களின் காலப் பகுதியில் இதை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக் காத போது நான் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக வும் அபிவிருத்தி குழு தலைவராகவும் இருந்த போது ஐந்து வருடங்கள் அந்த நேரத்தில் மஹிந்த சமரசிங்க,சாகல ரத்நாயக்க அமைச்சர் அவர்களும் அதற்கு முன்னர் அர்ஜுன ரணதுங்கவும் இங்கு வருகை தந்த போது மக்களுடைய காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என கூறிய போது அவர்கள் ஆதரவு தெரிவித்தார்கள்.

அப்போதைய மாவட்ட செயலாளராக இருந்த புஷ்பகுமார அவர்கள் இந்த காணிகள் அனைத்தையும் விடுவிப்பதாக கூறி ஐந்து வருடங்கள் மாவட்ட அபிவிருத்தி குழு கூட் டங்களின் போதும் தீர்மானங்கள் எடுத்தோம். தற்போது வர்த்தமானி ஊடான அறிவிப்பு செய்யப்படவில்லை என தற்போதையவர்கள் கூறுகின்றனர். இன்று இதனை இது தொடர்பான அறிக்கைகளை ஒப்படைக்க முற்பட்ட போது அது பயனிக்கவில்லை இதனை விவசாயிகளி டம் ஒப்படைத்து செல்கிறேன் . எங்கு வேண்டு மானாலும் இது தொடர்பில் குரல் கொடுக்க முன்வருவேன் இதனை அரசியலுக்காக பேச வில்லை அரசியலுக்கு என்று சோரம் போவதாக இருந்தால் என்னை விட்டு விடுங்கள்.தொடர்ந்தும் உங்கள் காணிகளை பெற அரசாங்கத்திடம் தீர்வு பெற முயற்சியுங்கள் என்றும் விவசாயிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்"

கடந்த காலத்தில் தற்போதைய ஆட்சி யாளர்கள் தேசிய மக்கள் சக்தி கட்சி கொள்கை கொண்டவர்கள் எதிரணியில் இருந்த போது ஆளும் அரசாங்கத்துக்கு எதிராக பல வீதி போராட்டங்களையும் பல எதிர்ப்புக்களையும் செய்தனர் ஆனால் ஆட்சியை பிடித்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதனை மறந்துள்ளது இருந்த போதிலும் எது எப்படியானாலும் காலா வதியாகுகின்ற நிலை அரசாங்கத்து எப்படியாவது வந்தே தீரும் இதற்காக இம் மக்களை வதைக்காது முத்து நகர் விவசாயிகளுக்காக தீர்வை பெற்றுக் கொடுப்பதே சாலச் சிறந்தது என கூறலாம்.

• • •

## படுகொலை... தொடர்ச்சி ...

சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளரும் முன்னால் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவருமான அ.அச்சுதன் தனது கருத்தை இவ்வாறு பதிவு செய்தார்.

"இலங்கையில் ஊடகவியலாளர்கள் பல் வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் கடந்த காலங்களில் பணியாற்றியுள்ளார்கள். யுத்தகாலத்தி லும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பணி யாற்றிய ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல்களை யும் எதிர் கொண்டார்கள். வடகிழக்கு உட்பட தென்னிலங்கை அடங்கலாக 44 ஊடக பணி யாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். உரிமைகள் மறுக்கப்பட்டு ஐயாத்துறை நடேசன், தராக்கி, சுகிர்தராஜன் போன்ற ஊடகர்கள் குறிப்பிட்டு சொல்லக் கூடிய வகையில் பணி யாற் றியுள்ளார்கள். அவர்களுடைய பேனா முனை மறுக்கப்பட்டு இது வரை நீதி கிடைக்க வில்லை.

வடகிழக்கில் பல்வேறு ஊடகத்துறை யில் நீண்டகாலமாக மறைக்கப்பட்ட பல உண்மைகளை வெளியில் கொண்டு வந்த ஊடகவியலாளர்கள் துப்பாக்கி முனையில் அவர்கள் வீழ்த்தப்பட்டார்கள். குறிப்பாக திரு கோணமலை மாவட்டத்தை பொறுத்த வரையில் சுகிர்தராஜன் படுகொலை செய்யப்பட்டு பல வருடங்கள் ஆகியும் இது வரை அவருக்கான நீதி மறுக்கப்பட்டுள்ளது. ஊடக தர்மம் குழி தோண்டி புதைக்கப்பட்டிருக்கின்றது.

அவர் உயர் பாதுகாப்பு வலயமான கிழக்கு மாகாண ஆளுனர் அலுவலகத்துக்கு அருகாமையி லேயே சுட்டு படுகொலை செய்யப்பட்டு பல வருடங்கள் கடந்து விட்டன. ஆனால் இது வரை நீதி கிடைக்கவில்லை அது போன்றே ஐயாத் துறை நடேசனும் மட்டக்களப்பில் சுட்டு கொல்லப்பட்டார். தமிழ் ஊடகவியலாளர்கள் மட்டுமல்ல சிங்கள ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். குறிப்பாக முக்கியமாக லசந்த விக்ரமதுங்க இவர் துணிச் சலாக பணியாற்றிய ஊடகவியலாளர் அதாவது பல்வேறு மறைக்கப்பட்ட உண்மைகளை வெளி உலகுக்கு எடுத்துக் காட்டிய ஒருவர் எக்னெலி கொட ஒரு முக்கியமான ஊடகர் இவர்களுக்கான நீதி கிடைக்கவில்லை .

ஊடகவியலாளர்கள் ஜனநாயகத்தின் முக்கிய பங்குதாரர்களாகவுள்ளனர். ஜனநாயகத் தின் நான்காவது தூண் . ஆட்சி மாற்றத்தை கூட பேனா முனையால் ஏற்படுத்தக்கூடிய சக்தி வாய்ந்தவர்கள் என்பதை சர்வதேச அளவில் நிரூபித்துள்ளனர். இலங்கையை பொறுத்தமட்டில் யுத்த காலத்தில் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பணியாற்றிய ஊடகவியலாளர்கள் இன்றும் அதே பாணியில் அச்சுறுத்தல்களை எதிர் கொள்கின்ற இல்லாமல் இருந்தாலும் அவர்களுக்கான அழுத்தங்கள் காணப்படுகின்றன.

கடந்த காலங்களை ஒப்பிடுகின்ற போது குறைவாக இருந்தாலும் அவர்களுக்கான முழுமையான ஊடக சுதர்திரம் வழங்கப்பட வேண்டும். ஒரு நாட்டின் முதுகெழும்பாக இயங்கக் கூடிய பண்பு ஒரு ஜனநாயகம் தலைத்தோங்க வேண்டிய கட்டமைப்பில் மிக முக்கிய பங்கு வகிப்பது ஒரு ஊடகமாகும்.

ஊடகத்தில் பணியாற்றுகின்றவர்கள் சுதந்திரமாக தக்களது கருத்துக்களை வெளியிடு வதற்கான உரிமை எப்போதும் காணப்பட வேண்டும். குறிப்பாக இன்று ஊடகர்கள் சுதந்திர மாக இயங்குகின்ற போதிலும் மறை முகமான பல செயற்பாடுகள் இடம் பெறாமல் இருப்பதற்கு இவ் அரசு பூரண பங்களிப்பை வழங்க வேண்டும். ஊடகவியலாளர்களின் பாதுகாப்பில் அவர்களது விடயங்களிலும் இவ் அரசு கவனம் எடுக்கும் என நாங்கள் நம்புகின்றோம்.

கடந்த காலங்களில் ஊடகவியலாளர்களை நினைவு கூறுவது கடினமாக காணப்பட்டது. ஆனால் அந்த நிலை புதிய அரசில் சற்று மாற்ற மடைந்திருக்கிறது. அது உண்மையில் வர வேற் கத்தக்கது. தற்போது இந்த தடை இல்லை என நான் உறுதிப்படுத்துகிறேன். காரணம் அண்மையில் நிமலராஜனின் நினைவு தினம் வடகிழக்கில் உணர்வு பூர்வமாக அனுஷ் டிக்கப்பட்டது.

ஆகவே தற்போது சுதந்திரமான சூழல் காணப்படுகின்ற நிலையிலும் ஊடகர்களுக்கான பூரணமான பாதுகாப்பான ஒரு கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்க வேண்டும். அப்போது தான் சுதந்திரமாக பயணிக்க முடியும் குறிப்பாக படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக் கான கொலைக்கான பின்னணி கண்டறியப்பட்டு நீதிநிலை நாட்டப்பட வேண்டும். திரு கோண மலையை பொறுத்தமட்டில் 24.01.2006ல் சுட்டு படுகொலை செய்யப்பட்ட சுப்ரமணியம் சுகிர்த ராஜனின் படுகொலைக்கான விசாரணை ஆரம் பிக்கப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

அது போன்று ஐயாத்துரை நடேசன் 2004.05.31ல் மட்டக்களப்பில் சுட்டு படுகொலை செய்யப்பட்டார். அவருடைய படுகொலை விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டும். உண் மையில் இது போன்று படுகொலை செய்யப் பட்ட ஊடகவியலாளர்களின் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு நீதி நிலை நாட்டப்பட வேண் டும் என்பதை யுத்த காலத்தில் பணியாற்றிய ஊடகர் என்பதால் இவ் விடயத்தை முன் வைக் கின்றேன். ஊடக கோட்பாடு, சட்ட திருத் தங்களின் அடிப்படையில் ஊடக விதி முறை களை இன்னும் வலுப்படுத்த வேண்டும்.

அதற்கு புதிய அரசு முன் வர வேண்டும். பல முக்கிய விடயங்களை ஆவணப்படுத்தவும் நீதியை நிலை நாட்டவும் படுகொலை செய் யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான ஒரு நீதிப் பொறிமுறையை உருவாக்க இவ் அரசு சட்ட ரீதியான ஒரு ஆவணத்தை ஏற்படுத்த வேண்டும். அப்போது தான் இலங்கை போன்ற அழகிய நாடு இன்னும் ஒரு வளமான நாடாக வலம் வருவதற்கு உண்மையில் ஊடகவியலாளர்கள் மறுக்கப்பட்ட நீதிகள் அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை கள் அனைத்தும் வெட்ட வெளிச்சத்துக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவிய லாளர்களுக்கான ஆணைக்குழுவை உருவாக்கி அதன் மூலம் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டு வன்முறைகளை பிரயோகித்து படு கொலை செய்தவர்களுக்கு சட்டத்தின் முன் நீதி நிலை நாட்டப்பட வேண்டும் அப்போது தான் எமது நாடு முன்னேக்கிய நிலைக்கு கொண்டு செல்ல முடியும். மீண்டும் கூறுகிறேன் ஊடகவிய லாளர்கள் ஒரு நாட்டின் முதுகெலும்பாக காணப் படுகிறார்கள்.

ஆகவே அவர்களுக்கான சகல நடவடிக் கைகளும் செயற்பாடுகளை முன்கொண்டு செல் வதற்கும் புதிய திருத்தங்களையும் சட்டத்தில் கொண்டு வர ஆவணம் செய்ய வேண்டும் என பகிரங்கமாக அழைப்பு விடுக்கின்றேன். இவ் அரசு கடந்து கால அரசுகளை விட சிறப்பான பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அதே போன்று ஊடகவியலாளர்களின் செயற் பாடுகளிலும் பார்வையை திருப்பி செயற்பட வேண்டும் என கோரிக்கையாக முன்வைக்கின் றேன் என்றார்.

மேலும் ஊடகர்களின் படுகொலைக்கான நீதி தொடர்பில் சிரேஷ்ட ஊடகவியலாளர் றிப்தி அலி தெரிவிக்கையில் "இலங்கையில் யுத்த காலப் பகுதியில் பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் இதில் பெரும்பாலான தமிழ் பேசும் ஊடகவியலாளர்களே. குறிப்பாக வடகிழக்கு ஊடகவியலாளர்களே அடங்குவர். கொழும்பில் லசந்த விக்ரமதுங்க கொல்லப்பட் டார். அது போன்று நியெஸ் பெஸ்ட், எம்டீவி காரியாலயம் தீக்கிரையாக்கப்பட்டது. இவ்வாறு பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளது.

ஆனால் இதற்கான நியாயம் கிடைக்க வில்லை. கடந்த ஆட்சியாளர்களும் நியாயத்தை பெற்றுக் கொடுக்க முன்வரவில்லை. தற்போது ஆட்சி மாற்றம் வந்துள்ள நிலையில் ஊழல்களுடன் தொடர்புடைய பழைய சம்பவங்களுடன் தொடர்பு பட்ட பலர் கைது செய்யப்படுகிறார்கள் உதாரணமாக 2005ல் முன்னாள் அமைச்சர் நிமால் லான்சா கைது செய்யப்பட்டார்.

அது போன்று ஊடகவியலாளர்களின் இது போன்ற சம்பவங்களை அநுர குமார அரசாங்கம் தேடிப் பார்க்க வேண்டும். பழைய பயில்களை தட்டி எடுத்து பொறுப்பானவர்கள் யார் என்பதை கண்டு விசாரணை மூலம் தெரியப்படுத்த வேண்டும். குறிப்பாக இனியபாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

யோசப் பரராஜசிங்கம் அவர்களின் 2005ல் இடம் பெற்ற சம்பவத்தில் கைதானார். இது போன்று நிமலராஜன் போன்றோர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நியாயத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்தால் தான் ஊடகவியலாளர்களுக்குள்ள அடக்கு முறைகளை இல்லாதொழிக்க முடியும் என்றார்.

எனவே தான் சுதந்திரமாக தங்களது பணிகளை செய்ய தற்போதைய ஊடகவியலா ளர்களுக்கு முழு சுதந்திரம் வழங்கப்படுவதுடன். தற்போதைய அரசாங்கம் படுகொலை செய்யப் பட்ட ஊடகர்களுக்கான நியாயத்தை பெற்றுக் கொடுக்கவும் முன்வர வேண்டும்.

• • •

## புற்றுநோயை .. . தொடர்ச்சி ...

மெசஞ்சர் ஆர்என்ஏ (எம்ஆர்என்ஏ) தொழில் நுட்பம், தடுப்பூசியை ஒவ்வொரு நபரின் குறிப்பிட்ட புற்றுநோய் தன்மைக்கு ஏற்ப வடிவமைக்க உதவியுள்ளது, இது மிகவும் பயனுள்ள மற்றும் துல்லியமான சிகிச்சையை வழங்குகிறது.

"அனைத்து ஆவணங்களும் சிறிது காலத்திற்கு முன்பு சுகாதார அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன, மேலும் ஹெர்சன் நிறுவனம், ப்ளோகின் மையம் மற்றும் எங்கள் நிறுவனம் மெலனோமாவிற்கு எதிராக தனிப்பயனாக்கப்பட்ட முதல் தடுப்பூசி வகைக ளின் உற்பத்தியைத் தொடங்க விரைவில் ஒப்பு தல் பெறும் என்று நாங்கள் நம்புகிறோம்"

நோயாளி குழுக்கள் ஏற்கனவே உருவாக் கப்பட்டு, அவர்களின் மரபணு தரவு பகுப்பாய்வு செய்யப்பட்டு, ஆராய்ச்சியாளர்கள் "ஒரு மாதம் அல்லது ஒன்றரை மாதங்களுக்குள்" சிகிச்சை யைத் தொடங்கத் தயாராக உள்ளனர் என்று அவர் கடந்த புதன்கிழமை(24) தெரிவித்துள்ளார்.

புதிய புற்றுநோய் தடுப்பூசி முன் மருத்துவ பரிசோதனையின் போது அதிக செயல்திறனைக் காட்டியதாகவும், மருத்துவ பயன்பாட்டிற்குத் தயாராக இருப்பதாகவும் இந்த மாத தொடக்கத் தில், ஃபெடரல் மெடிக்கல்-பயால ஜிகல் ஏஜெ ன்சியின் தலைவரான வெரோனிகாஸ் க்வோர்ட் சோவா தெரிவித்திருந் தார்.

ஹெர்சன் மாஸ்கோ ஆன்காலஜி ஆராய் ச்சி நிறுவனம் மற்றும் புளோகின் தேசிய மருத்துவ ஆராய்ச்சி மையம் ஆகிய நிறுவனங் களிடம் இருந்து 60 மெலனோமா நோயாளிகள் தனிப்பயனாக்கப்பட்ட எம்.ஆர்.என்.ஏ தடுப்பூசி யைப் பெறுவார்கள்.

ரஷ்யாவின் கோவிட்-19 தடுப்பூசியான ஸ்புட்னிக் வி ஐ உருவாக்கியதன் மூலம் கம லேயா நிறுவனம் சர்வதேச அளவில் அறியப் பட்டிருந்தது. புதிய புற்றுநோய் சிகிச்சையில் பயன்படுத்தப்படும் அதே எம்.ஆர்.என்.ஏதொ ழில் நுட்பத்தின் அடிப்படையில் எச்.ஐ.வி தடுப்பூசியிலும் இந்த நிறுவனத்தின் ஆராய்ச்சி யாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

**காணியுரிமை ... தொடர்ச்சி ...**

மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டு, சட்டம் மூலமாக உருவாக்கப்பட்ட திணைக்களங்கள், அதிகாரசபைகள் என்பன அமைச்சுகள், அரசாங் கங்கள் மாறுகின்ற காரணத்தால், மாறி விடாது. காணாமல் போய் விடாது. இந்த அடிப்படை உண்மையை நீங்கள் புரிந்து கொண்டு, இந்த முயற்சியை நிறுத்த வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, மலையக அபிவிருத்தி அதிகார சபை கலைக்கப்படக்கூடாது என்ப தனை வலியுறுத்தி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் கையெழுத்து வேட்டை முன்னெடுக்கப்படவுள் ளதாக இந்த அதிகாரசபையை உருவாக்கும் பணியில் முன்னின்று செயற்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலக ராஜா தெரிவித்துள்ளார். மலையக அதிகாரசபை கலைக்கப்படாது என அரசாங்கம் வாய்மொழி மூலம் உறுதி அளித்தாலும், எழுத்து மூல உத்தர வாதம் வழங்கப்பட வேண்டும் என்றும் வலியு றுத்தினார்.

அத்துடன், 2026ஆம் ஆண்டுக்கான பாதீட் டில் இந்த அதிகாரசபைக்கு போதுமான நிதி ஒதுக்கப்படுவதன் ஊடாக அது, கலைக்கப்படாது என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேநேரம். மலையக அதிகார சபை யானது, அரசாங்கத்தின் கலைக்கப்படும் நிறுவ னங்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்றும் மறுசீரமைப்பின் பெயரில் அதிகாரக் குறைப்பு செய்யப்படக்கூடாது என் றும், சமூக நலனுக்கான அபிவிருத்தி திட் டங்கள் தொடர்ந்து நடைமுறையில் இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

**அரசாங்கத்தின் பதில்**

மலையக அதிகார சபை என அறியப்படும் பெருந்தோட்ட பிராந்திய புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையை மூடி விட மாட்டோம் என்றும் அதை தொடர்ந்து முன்னெடுப்போம் என்றும் துறை சார் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார். வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இந்த உத்தரவாதத்தை அளித்தார்.

உறுப்பினர்களை நியமித்து நிதி ஒதுக்கி, காத்திரமான செயற்பாட்டினூடாக வினைத் திறனை காட்டுவது மூடப்படுவதிலிருந்து தப்பிக்கும் தற்காலிக ஏற்பாடாக இருந்தாலும் அரசாங்கம் செயற்படும் முறைமையை அறிந்த வர்களுக்குத் தெரியும் இந்த அதிகார சபையை மூடுவது குறித்த அமைச்சரவை தீர்மானத்தை முறையாக மீளப்பெற வைப்பதே இதற்கான சரியான நீண்டகால தீர்வாக இருக்கும் என்று.

மலையக மக்களின் வாழ்வியலில் முன் னேற்றகரமான மாற்றத்தை ஏற்படுத்த பல அமைச்சுகளினதும், அரச நிறுவனங்களினதும் தொடர் ஒருங்கிணைப்பு அவசியம் என்ற காரணத்தினாலேயே தனி அமைச்சை தாண்டி இத்தகைய அதிகார சபை உருவாக்கப்பட்டது. இதன் அண்மைக்கால செயற்பாடுகள் மந்த கதியிலிருந்திருப்பினும் எதிர்காலத் திட்டங் களை காத்திரமானதாக மாற்றுவதற்கு சந்தர்ப்பம் உள்ளது.

மலையக சமூகம் பொருளாதார ரீதியாக வலுப்பெற்று நாட்டின் அபிவிருத்திக்கு சம பங்குதாரராக பங்களிப்பதை வழங்குவதற்கு இத்தகைய அமைப்பொன்றின் அத்தியாவசிய தேவை உள்ளது. எனவே இந்நிலைமையை மாற்றி அதிகாரசபையை பாதுகாத்து வினைத்திறனாக செயற்படவைக்க வேண்டு மெனின், அரசாங்கத்தில் இருக்கும் மலையகப் பிரதிநிதிகள் இவ்வதிகார சபையின் அவசி யத்தை, கட்சி மற்றும் அரசாங்கத்தின் மேல் மட்டங்களில் இருப்பவர்களுக்குப் புரியவைத்து அமைச்சரவை தீர்மானத்தை மாற்றும் படி கோரவேண்டும்.

அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்த வர் என்ற அடிப்படையில் பிரதமரிடமும் அதற்கு உடன்பட்டவர் என்ற வகையில் ஜனாதிபதி யிடமும் இத்தீர்மானத்தை மீளப்பெறுவதற்கான கோரிக்கையை முன்வைத்து அழுத்தம் கொடுக்க வேண்டும். அதிகார சபைக்கான ஆளணி மற்றும் போதியளவான நிதி ஒதுக்கீட்டை எதிர்வரும் பாதீட்டு திட்டத்தில் கோர வேண்டும்.

• • •

**கடும் வீழ்ச்சியை. . . தொடர்ச்சி ...**

நேர்மாறாக, இந்தியா கிட்டத்தட்ட நான்கு தசாப் தங்களுக்கு தொடர்ந்து வளர்ந்துஇ 2060 இல் சுமார் 1.7 பில்லியன் மக்களை எட்டும், படிப் படியாக சுமார் 1.5 பில்லியனாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு நேர்மாறாக, அமெரிக்காவும் ஐரோப்பாவும் படிப்படியாக மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்காவின் மக்கள் தொகை மெதுவாகவும் சீராகவும் வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, நூற்றாண்டின் இறுதி யில் சுமார் 420 மில்லியன் மக்களை எட்டும். இதற்கிடையில், ஐரோப்பாவின் மக்கள் தொகை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த புள்ளிவிவரங்களின் அடிப்படையில், அதன் மக்கள்தொகை 2020 ஆம் ஆண்டில் சுமார் 750 மில்லியனை எட்டியது, மேலும் 2100 ஆம் ஆண்டில் சுமார் 590 மில்லியனாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது சீனாவின் மக்கள் தொகை கணிப்பீட்டின் அளவில் இருந்து வெகு தொலைவில் இல்லை.


சர்வதேச மக்கள்தொகை ஒப்பீடுகளுக்கு ஐ.நா.வின் மாதிரி மிகவும் பரவலாகப் பயன் படுத்தப்படும் அடிப்படையாகும், ஆனால் அனைத்து மக்கள்தொகை கணிப்புகளும் அடிப்படை அனுமானங்களுக்கு உணர்திறன் கொண்டவை. பிற ஆராய்ச்சி குழுக்கள் வெவ் வேறு நீண்டகால மக்கள்தொகைபுள்ளி விவ ரங்களை கணிப்பிட கருவுறுதல், ஆயுட் காலம் மற்றும் இடம்பெயர்வு பற்றிய வெவ்வேறு மக்கள்தொகை அனுமானங்களைப் பயன்படுத்து கின்றன.

**உயிர்த்த ஞாயிறு ... தொடர்ச்சி ...**

திணைக்களம் மீது நம்பிக்கை வெளியிட்ட அவர், சமீபத்திய கைதுகள் உள்ளக நாசவேலைகளை வெளிப்படுத்தியதாக குறிப் பிட்டார்.

“பல முன்னாள் இராணுவ அதிகாரிகள் விரைவில் கைது செய்யப்பட உள்ளனர் மற்றும் விசாரணைகள் தொடர்கின்றன அவை முன்னேறி வருகின்றன’ என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.





இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்

